www.kalvinesan.com
https://t.me/kalvinesan




Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

www.kalvinesan.com https://t.me/kalvinesan

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

சுராவின்

# தமிழ் உரைநூல்

## 12ஆம் வகுப்பு

**இலவசம்**
சுய மதிப்பீடு பயிற்சி நூல்



### சிறப்பம்சங்கள்

- புதிய பாடதிட்டத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- பாடப்பகுதிகளிலுள்ள அனைத்து வினாக்களுக்கும் எளிமையான விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு, மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம். கூடுதல் வினா – விடைகள், மொழித்திறன் பயிற்சிகள்(கவிதைகள், இலக்கிய நயம் பாராட்டல், பழமொழியும் வாழ்க்கை நிகழ்வும், பழமொழி மொழிபெயர்ப்பு, மொழியாக்கம்) ஆகியவை தரப்பட்டுள்ளன.
- அரசு மாதிரி வினாத்தாள் 2019 (அ.மா.வி.), **பிடிஎ 1 முதல் 6 மாதிரி வினாத்தாள்கள்**, காலாண்டுத் தேர்வு 2019, அரையாண்டுத் தேர்வு 2019, மார்ச் தேர்வு 2020, செப்டம்பர் தேர்வு 2020, ஆகஸ்டு தேர்வு 2021, வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- அரசு துணைத்தேர்வு ஆகஸ்டு – 2021 வினாத்தாள் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.



சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com PH:9600175757 / 8124301000

Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

2022-23 பதிப்பு
© வெளியீட்டாளர்கள்

ISBN : 978-93-92559-17-4
குறியீட்டு எண் : SG142

**எழுதி வழங்கியவர்கள்**

**செ. சசிகலாதேவி,** M.A., M.Phil.,(Tamil) PGDLA

**க. மதிமாறன்,** M.A., M.Ed, M.Phil, PGDCA

**கமலா**, M.A., B.Ed.,

**தலைமை அலுவலகம்:**

1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
☎ 91-44-4862 9977, 486 27755
96001 75757 / 81242 01000 / 81243 01000,
வாட்ஸ்அப்: 8124201000
**e-mail :** orders@surabooks.com,
**website :** www.surabooks.com

**Our Guides for XI, XII Standard**

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

**மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு**

புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 96001 75757 / 8124301000
வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com

பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்

21.12.2021



orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

# பதிப்பாசிரியர் உரை

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.** – திருவள்ளுவர்

**எங்கள் வாழ்த்திற்குரிய**

**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். புதிய பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின்** பன்னிரெண்டாம் வகுப்பிற்கான **தமிழ் உரைநூல்** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீடு, மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம், கூடுதல் வினா விடைகள், மொழித்திறன் பயிற்சிகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

***மாணவர்களாகிய நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்த தமிழ் உரைநூல் உருவாக்கம் பெற்றுள்ளது.***

**இறையருளை வேண்டுகிறோம்!**

**நலமே விளைக! . . .**

- பதிப்பகத்தார்

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,

(சுரா பதிப்பகம்)

## மாணவச் செல்வங்களே...

**குறிப்பு:**

- பாடப்பகுதியை முழுமையாகப் படிக்கவும்.
- தலைப்பு, ஆசிரியர் குறிப்பு, நுழையும்முன், சொல்லும் பொருளும், பாடலின் பொருள், இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம், புணர்ச்சி விதிகள், நூல்வெளி என அனைத்தையும் ஒரு மதிப்பெண் நோக்கில் படிக்கவும்.
- இலக்கணப் பகுதிகளை எழுதிப் பார்த்தல் நலம்.
- தேர்வில் ஆசிரியர் குறிப்பு, நூற்குறிப்பு கேள்விகள் கேட்கப்பட்டால் கூடுதல் செய்திகள் தவிர்த்து எழுதினால் போதுமானது.
- செய்யுள், உரைநடை, துணைப்பாடம் ஆகிய பகுதிகளில் நெடுவினாக்களுக்கு குறிப்புச் சட்டகம் இட்டு எழுதுதல் முழு மதிப்பெண் பெற வழி வகுக்கும்.
- கதை போல உள்வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்.

ஆழ்ந்து படியுங்கள்! வெற்றி உங்களுக்கே!!



orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | மொழி<br>**உயிரினும் ஓம்பப் படும்** | இளந்தமிழே! (செய்யுள்) | 1-42 |
| | | தமிழ்மொழியின் நடை அழகியல் - தி.சு நடராசன்(உரைநடை) | |
| | | தன்னேர் இலாத தமிழ் (செய்யுள்) | |
| | | தம்பி நெல்லையப்பருக்கு (துணைப்பாடம்) | |
| | | தமிழாய் எழுதுவோம் (இலக்கணம்) | |
| 2. | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்<br>**பெய்யெனப் பெய்யும் மழை** | பெருமழைக்காலம் (உரைநடை) | 43-75 |
| | | பிறகொரு நாள் கோடை (செய்யுள்) | |
| | | நெடுநல்வாடை (செய்யுள்) | |
| | | முதல்கல் (துணைப்பாடம்) | |
| | | நால்வகைப் பொருத்தங்கள் (இலக்கணம்) | |
| 3. | பண்பாடு<br>**சுற்றத்தார் கண்ணே உள** | தமிழர் குடும்ப முறை (உரைநடை) | 76-133 |
| | | விருந்தினர் இல்லம் (செய்யுள்) | |
| | | கம்பராமாயணம் (செய்யுள்) | |
| | | உரிமைத்தாகம் (துணைப்பாடம்) | |
| | | பொருள் மயக்கம் (இலக்கணம்) | |
| | | திருக்குறள் (வாழ்வியல்) | |
| 4. | கல்வி<br>**செல்வத்துள் எல்லாம் தலை** | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் (உரைநடை) | 134-183 |
| | | இதில் வெற்றி பெற (செய்யுள்) | |
| | | இடையீடு (செய்யுள்) | |
| | | புறநானூறு (செய்யுள்) | |
| | | பாதுகாப்பாய் ஒரு பயணம் (துணைப்பாடம்) | |
| | | பா இயற்றப் பழகலாம் (இலக்கணம்) | |
| 5. | நாகரிகம், தொழில், வணிகம்<br>**நாடென்ப நாட்டின் தலை** | மதராசப்பட்டினம் (உரைநடை) | 184-224 |
| | | தெய்வமணிமாலை (செய்யுள்) | |
| | | தேவாரம் (செய்யுள்) | |
| | | அகநானூறு (செய்யுள்) | |
| | | தலைக்குளம் (துணைப்பாடம்) | |
| | | படிமம் (இலக்கணம்) | |




orders@surabooks.com PH:9600175757 / 8124301000

Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

www.kalvinesan.com https://t.me/kalvinesan

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 6. | கலை, அழகியல், புதுமைகள்<br>**சிறுகை அளாவிய கூழ்** | திரைமொழி **(உரைநடை)** | 225-297 |
| | | கவிதைகள் **(செய்யுள்)** | |
| | | சிலப்பதிகாரம் **(செய்யுள்)** | |
| | | மெய்ப்பாட்டியல் **(செய்யுள்)** | |
| | | நடிகர் திலகம் **(துணைப்பாடம்)** | |
| | | காப்பிய இலக்கணம் **(இலக்கணம்)** | |
| | | திருக்குறள் **(வாழ்வியல்)** | |
| 7. | நாடு, சமூகம், அரசு, நிருவாகம்<br>**அருமை உடைய செயல்** | இலக்கியத்தில் மேலாண்மை **(உரைநடை)** | 298-343 |
| | | அதிசய மலர் **(செய்யுள்)** | |
| | | தேயிலைத் தோட்டப் பாட்டு **(செய்யுள்)** | |
| | | புறநானூறு **(செய்யுள்)** | |
| | | சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும் **(துணைப்பாடம்)** | |
| | | தொன்மம் **(இலக்கணம்)** | |
| 8. | மனிதம், ஆளுமை<br>**எல்லா உயிரும் தொழும்** | நமது அடையாளங்களை மீட்டவர் **(உரைநடை)** | 344-394 |
| | | முகம் **(செய்யுள்)** | |
| | | இரட்சணிய யாத்திரிகம் **(செய்யுள்)** | |
| | | சிறுபாணாற்றுப்படை **(செய்யுள்)** | |
| | | கோடை மழை **(துணைப்பாடம்)** | |
| | | குறியீடு **(இலக்கணம்)** | |
| **மொழித்திறன் பயிற்சிகள்**<br>கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுதல், வல்லின மெய்களை இட்டு எழுதுதல், வல்லின மெய்களை நீக்கி எழுதுதல், எழுத்துப் பிழையைத் திருத்தி எழுதுதல், வாக்கியப் பிழைகளைத் திருத்தி எழுதுதல், ஆங்கிலச் சொல்லை நீக்கி தமிழில் எழுதுதல், பிறமொழிச் சொற்களை நீக்கி தமிழில் எழுதுதல், மரபுப் பிழையை நீக்கி எழுதுதல், மயங்கொலி, நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுதல், வினா அமைத்து எழுதுதல், கவிதைகள், இலக்கிய நயம் பாராட்டல், பழமொழியும் வாழ்க்கை நிகழ்வும், பழமொழி - மொழிபெயர்ப்பு, மொழியாக்கம். | | | 395-418 |
| **அரசு துணைத்தேர்வு ஆகஸ்டு - 2021 வினாக்கள் - விடைகள்** | | | 419-426 |






orders@surabooks.com PH:9600175757 / 8124301000

Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

# மனப்பாடச் செய்யுள்

## தன்னேர் இலாத தமிழ்

இயல் - 1

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!

பா வகை : நேரிசை வெண்பா
அணி : பொருள் வேற்றுமை அணி

- தண்டி

செப். 2020

## நெடுநல்வாடை

இயல் - 2

'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க

பாவகை : நேரிசை ஆசிரியப்பா

- நக்கீரர்

அ.மா.வி 2019; பிடிஏ–3

## கம்பராமாயணம்

இயல் - 3

2. 'துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்.

பாவகை : கலிவிருத்தம்

பிடிஏ–1; காலாண்டுத் தேர்வு 2019; மார்ச் 2020

9. குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

பா வகை : அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

- கம்பர்


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

## திருக்குறள்

### இல்வாழ்க்கை

1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

3. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். ஆக. 2021

### செய்ந்நன்றி அறிதல்

4. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

8. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. பிடிஏ–2

9. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. பிடிஏ–4,6

### வெஃகாமை

12. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

### வெகுளாமை

15. மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.

17. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். அ.மா.வி, காலாண்டுத் தேர்வு 2019

18. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

### ஊழ்

19. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும். பிடிஏ–5

– திருவள்ளுவர்

## இதில் வெற்றிபெற

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

பா வகை : **எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

– சுரதா




orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com
www.surabooks.com

மனப்பாடச் செய்யுள்

## புறநானூறு

இயல் - 4

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே.

பாவகை : நேரிசை ஆசிரியப்பா, திணை : பாடாண்

– ஔவையார்

அரையாண்டுத் தேர்வு 2019

## தெய்வமணிமாலை

இயல் - 5

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும்.

பாவகை : பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

– இராமலிங்க அடிகள்

பிடிஏ–2, ஆக. 2021

## சிலப்பதிகாரம்

இயல் - 6

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை.

பாவகை : ஆசிரியப்பா

– இளங்கோவடிகள்

பிடிஏ–5

## திருக்குறள்

### அறிவு உடைமை

1. அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்.

3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. பிடிஏ–1, 3; அரையாண்டுத் தேர்வு 2019

5. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய். செப். 2020

### சிற்றினம் சேராமை

7. நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

– திருவள்ளுவர்


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com
www.surabooks.com

## திருக்குறள்

### வினைத்திட்பம்

8. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

9. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். மார்ச் 2020

11. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

### தூது

12. கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

### உட்பகை

15. வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

### சூது

20. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

– திருவள்ளுவர்

## புறநானூறு

இயல் – 7

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்;

பாவகை : நேரிசை ஆசிரியப்பா, திணை : பாடாண்

– பிசிராந்தையார்

## இரட்சணிய யாத்திரிகம்

இயல் – 8

2. பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி. பிடிஏ–4, 6

பாவகை : அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

– எச்.ஏ. கிருட்டிணனார்

## சிறுபாணாற்றுப்படை

இயல் – 8

இவர்களோடு நல்லியக்கோடன்
................ என ஆங்கு
எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்.

பாவகை : நேரிசை ஆசிரியப்பா

– நல்லூர் நத்தத்தனார்



orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

இயல் 1

உயிரினும் ஓம்பப் படும் - மொழி

# இளந்தமிழே!

- சிற்பி பாலசுப்பிரமணியம் கவிதைப்பேழை

## கரு

- ✳ தமிழ் மொழி நம் அடையாளம்.
- ✳ தோன்றிய காலந்தொட்டு இன்னும் உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது நம் தமிழே !
- ✳ எட்டுத்திக்கும் புகழ் பரப்பும் உன்னத மொழி தமிழே !
- ✳ தமிழின் பெருமையை பாடாத மரபுக்கவிஞர்கள் இல்லை. தமிழ்மொழி தன்னை புதுப்பித்துக் கொண்டு பழமையான சிறப்பையும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பது கவிஞர்கள் ஆசை.
- ✳ மூன்று சங்கங்களில் அரியணையில் அமர்ந்து கொடை வள்ளல்களை ஈந்துள்ள தமிழை அந்தப் பொற்காலம் மீண்டும் அமைவதற்கு இன்னிசைபாடி அழைப்பதாக பாடல் அமைந்துள்ளது.

## ஆசிரியர் குறிப்பு



**பெயர்** : பாலசுப்பிரமணியம்

**புனைப் பெயர்** : சிற்பி

**பெற்றோர்** : பொன்னுசாமி - கண்டியம்மாள்

**பிறந்த ஊர்** : ஆத்துப் பொள்ளாச்சி (கோயம்புத்தூர் மாவட்டம்)

**பிறப்பு** : 1936, ஜூலை 29

**பணி** : முதலில் பொள்ளாச்சி நல்லமுத்து மகாலிங்கம் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர். இரண்டாவதாக கோவையிலுள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவர்.

**படைப்புகள்** : **கவிதை நூல்கள்** ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி, மௌன மயக்கங்கள், நீலக்குருவி போன்றவை. மேலும் கவிதைநாடகம், சிறுவர் நூல்கள், புதினங்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் போன்றவற்றைப் படைத்துள்ளார்.

**சிறப்பு** : கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர் என்று பன்முகச் சிறப்பு கொண்டவர். சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினராக உள்ளார். இருமுறை சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றுள்ளார்.

**விருதுகள்** : சாகித்திய அகாதெமி விருது (2001-ஆம் ஆண்டு, அக்னி சாட்சி - மொழிபெயர்ப்பு நூல்)
சாகித்திய அகாதெமி விருது (2002-ஆம் ஆண்டு, ஒரு கிராமத்து நதி - கவிதை நூல்)
தமிழக அரசு விருது (1982-ஆம் ஆண்டு, மௌன மயக்கங்கள் - கவிதை நூல்)
தமிழக அரசு விருது (1998-ஆம் ஆண்டு, பூஜ்யங்களின் சங்கிலி - கவிதை நூல்)
தமிழ்நாடு அரசு கலைமாமணி விருது (2009-ஆம் ஆண்டு, சிறந்த படைப்பாளி) இவை தவிர்த்து மேலும் பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

**அறக்கட்டளை** : 1996-இல் இவரால் தொடங்கப்பட்ட சிற்பி அறக்கட்டளை தமிழில் தலைசிறந்த கவிஞர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கி சிறப்பித்து வருகிறது.

**இவருடைய கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்ட மொழிகள் :** ஆங்கிலம், கன்னடம், மலையாளம், இந்தி, மராத்தி

## பாடப்பகுதி

சிற்பி பாலசுப்பிரமணியத்தின் **நிலவுப்பூ** என்ற கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள ஒரு கவிதை பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

உயிரினும் ஓம்பப் படும்


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


பாடல்

## இளந்தமிழே!



**செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்**
**செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்!**
**தம்கைகள் அதனைப்போல் சிவந்து நோகத்**
**தாமுழைக்கும் தொழிலாளர் வியர்வை வெள்ளம்**
**விம்முகின்ற தோள்மீதில் முத்துமுத்தாய்**
**வீற்றிருக்கும், அவையெல்லாம் வியந்து பாட**
**எம்மருமைச் செந்தமிழே! உன்னை யல்லால்**
**ஏற்றதுணை வேறுண்டோ? இயம்பி டாயே!**

### சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| செம்பரிதி | - செந்நிறக் கதிர்களை உடைய கதிரவன் (அல்லது) சூரியன் |
| மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் | - உயர்ந்த மலையின் பின்சென்று மறைவான் |
| வானமெல்லாம் | - ஆகாயம் எங்கும் |
| செந்நிறத்துப் பூக்காடாம் | - சிவந்த நிறமுடைய பூக்கள் அடர்ந்து பரவிக் கிடக்கும் |
| தம்கைகள் அதனைப்போல சிவந்து | - செந்நிறப் பூக்கள் செறிந்துள்ள காட்சியைப் போல சிவப்பாகும் அளவிற்கு |
| நோகத் தாம் உழைக்கும் தொழிலாளர் | - கடினமாக உழைக்கும் தொழிலாளிகளின் |
| விம்முகின்ற தோள்மீதில் | - பருத்துள்ள தோள்களின் மேல் |
| வியர்வை வெள்ளம் | - அதிகளவிலான வியர்வைத் துளிகள் |
| முத்து முத்தாய் வீற்றிருக்கும் | - முத்துகள் போல இருக்கும் |
| எம் அருமைச் செந்தமிழே | - எங்களது அருமையான செந்தமிழ் மொழியே |
| அவையெல்லாம் வியந்துபாட | - அவற்றையெல்லாம் புகழ்ந்து பாடுவதற்கு |
| உன்னை அல்லால் | - உன்னைத் தவிர |
| ஏற்ற துணை வேறு உண்டோ | - பொருத்தமான வேறு துணை உண்டோ |
| இயம்பிடாயே | - கூறுவாயாக |

### பொருளுரை

செந்நிறக் கதிர்களை உடைய கதிரவன் மாலைப் பொழுதில் உயர்ந்த மலைகளின் பின்சென்று மறைவான். அப்போது ஆகாயம் எங்கும் செந்நிறப் பூக்களை அடர்த்தியாக தூவியது போன்று காட்சியளிக்கும். அதைப்போல, தம் கைகள் சிவந்து போகும் அளவிற்கு கடினமாக உழைக்கும் தொழிலாளிகளின் பருத்து விளங்கும் தோள்களின் மீது வியர்வைத் துளிகள் முத்து முத்தாகக் காணப்படும். இவற்றையெல்லாம் புகழ்ந்து பாடுவதற்கு செந்தமிழே உன்னைத் தவிர பொருத்தமான வேறு துணை உண்டோ? கூறுவாயாக.

### விரிவான விளக்கம்

மாலைப் பொழுதில் சூரியன் மறையும் நேரத்தில் வானம் சிவந்து காணப்படுவது இயற்கையான ஒரு நிகழ்வு. அக்காட்சியானது சிவந்த பூக்களை சிதறிவிட்டது போல் காணப்படுகிறது என்று ஆசிரியர் உவமைநயத்துடன் கூறியுள்ளார். வானம் சிவந்திருப்பதை தொழிலாளியின் சிவந்த கைகளுக்கு ஒப்புமைப்படுத்தியுள்ளார். தொழிலாளியின் தோள்மீது வியர்வை முத்துமுத்தாய் காணப்படுவதை 'வியர்வை வெள்ளம்' என்று உருவகப்படுத்தியுள்ளார்.

மேற்கண்ட காட்சிகளை எல்லாம் புகழ்ந்து உரைப்பதற்கு தமிழ்மொழியைத் தவிர, வேறு மொழிகள் தனக்குப் பயன்படாது என்பதை குறிப்பால் உணர்த்தியுள்ளார்.

உவமைநயம், உருவகம் போன்றவற்றை அமைத்துப் பாடுவதற்கு செந்தமிழ் மொழியே தனக்கு துணையாகும் என்று ஆசிரியர் கூறியுள்ளார்.

**அருஞ்சொற்பொருள் :**

| | |
|---|---|
| 1. பரிதி - சூரியன் | 4. ஏற்ற துணை - பொருத்தமான துணை |
| 2. விம்முகின்ற தோள் - பருத்திருக்கின்ற தோள் (பெரிய தோள்கள்) | 5. இயம்புதல் - கூறுதல் |
| 3. வியந்து - புகழ்ந்து | |




orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

**பிரித்தெழுதுக:**

| | |
|---|---|
| 1. செம்பரிதி – செம்மை + பரிதி | 6. அவையெல்லாம் – அவை + எல்லாம் |
| 2. செந்நிறம் – செம்மை + நிறம்தோள்கள்) | 7. செந்தமிழே – செம்மை + தமிழே |
| 3. பூக்காடு – பூ + காடு | 8. உன்னையல்லால் – உன்னை + அல்லால் |
| 4. வானமெல்லாம் – வானம் + எல்லாம் | 9. வேறுண்டோ – வேறு + உண்டோ |
| 5. தாமுழைக்கும் – தாம் + உழைக்கும் | |

**இலக்கணக்குறிப்பு :**

| | |
|---|---|
| 1. செம்பரிதி, செந்நிறம், செந்தமிழ் | – பண்புத்தொகைகள் |
| 2. வியர்வை வெள்ளம், பூக்காடு | – உருவகங்கள் |
| 3. சிவந்து, வியந்து | – வினையெச்சங்கள் |
| 4. முத்து முத்தாய் | – அடுக்குத்தொடர் காலாண்டுத் தேர்வு 2019 |
| 5. விம்முகின்ற | – பெயரெச்சம் |

**பகுபத உறுப்பிலக்கணம் :**

**சாய்ப்பான் – சாய் + ப் + ப் + ஆன்**
சாய் – பகுதி
ப் – சந்தி
ப் – எதிர்கால இடைநிலை
ஆன் – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி

**வியந்து – விய + த்(ந்) + த் + உ** பிடிஏ–3
விய – பகுதி
த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

**விம்முகின்ற – விம்மு + கின்று + அ** காலாண்டுத் தேர்வு 2019
விம்மு – பகுதி
கின்று – நிகழ்கால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

**இருந்தாய் – இரு + த் (ந்) + த் + ஆய்**
இரு – பகுதி
த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
ப் – இறந்தகால இடைநிலை
ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

**புணர்ச்சி விதி :**

**பண்புப்பெயர் புணர்ச்சி**

1. **செம்பரிதி** – செம்மை + பரிதி — அரையாண்டுத் தேர்வு 2019, ஆக. 2021
   **விதிகள்:** செம்மை + பரிதி
   (i) '**ஈறு போதல்**' விதிப்படி 'மை' விகுதி கெட்டு '**செம் + பரிதி**' என்றானது.
   (ii) '**செம் + பரிதி**' என்பது இயல்பாகப் புணர்ந்து '**செம்பரிதி**' என்றானது.
2. **செந்நிறம்** – செம்மை + நிறம்
   **விதிகள்:** செம்மை + நிறம்
   (i) '**ஈறு போதல்**' விதிப்படி 'மை' விகுதி கெட்டு '**செம் + நிறம்**' என்றானது.
   (ii) '**முன்னின்ற மெய் திரிதல்**' என்ற விதிப்படி '**செந்நிறம்**' என்றானது.
3. **செந்தமிழே** – செம்மை + தமிழே — மார்ச் 2020
   **விதிகள்:** செம்மை + தமிழே
   (i) '**ஈறு போதல்**' விதிப்படி 'மை' விகுதி கெட்டு '**செம் + தமிழே**' என்றானது.
   (ii) '**முன்னின்ற மெய் திரிதல்**' என்ற விதிப்படி வருமொழியின் முதல் எழுத்தான 'த' விற்கு இனமான 'ந்' என்ற எழுத்து தோன்றி '**செந்தமிழே**' என்றானது.

**மெய்யீற்றுப் புணர்ச்சி**

1. **வானமெல்லாம்** – வானம் + எல்லாம் — பிடிஏ–4; செப். 2020
   **விதி :** வானம் + எல்லாம் – மெய்யீற்றின் முன்(ம்) உயிர் வந்ததால் (எ)
   '**உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி '**வானமெல்லாம்**' என்றானது.
2. **தாமுழைக்கும்** – தாம் + உழைக்கும்
   **விதி :** தாம் + உழைக்கும் – மெய்யீற்றின் (ம்) முன் உயிர் வந்ததால் (உ) '**உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி '**தாமுழைக்கும்**' என்றானது.

உயிரினும் ஓம்பப் படும்

**உடம்படுமெய் புணர்ச்சி**

1. **உன்னையல்லால்** – உன்னை + அல்லால்
**விதிகள்:** உன்னை + அல்லால்
(i) **'இ ஈ ஐ வழி யவ்வும்'** என்ற விதிப்படி 'உன்னை + ய் + அல்லால்' என்றானது.
(ii) **'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி, **'உன்னையல்லால்'** என்றானது.

2. **அவையெல்லாம்** – அவை + எல்லாம்.
**விதிகள்:** அவை + எல்லாம்
(i) நிலைமொழியின் ஈற்றில் உயிரும் (வ் + ஐ) வருமொழி முதலில் உயிரும் (எ) வந்ததால் **'இ ஈ ஐ வழி யவ்வும்'** என்ற விதிப்படி இரண்டையும் இணைக்க இடையில் யகரம் தோன்றி **'அவை + ய் + எல்லாம்'** என்றானது.
(ii) **'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி புணர்ந்து **'அவையெல்லாம்'** என்றானது.

**குற்றியலுகரப் புணர்ச்சி**

1. **வீற்றிருக்கும்** – வீற்று + இருக்கும்
**விதிகள்:** வீற்று + இருக்கும்
(i) **'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'** என்ற விதிப்படி வருமொழி முதலில் உயிர் (இ) வந்ததால் நிலைமொழி ஈற்றிலுள்ள உகரம் கெட்டு 'வீற்ற் + இருக்கும்' என்றானது.
(ii) **'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி புணர்ந்து **'வீற்றிருக்கும்'** என்றானது.

2. **வேறுண்டோ** – வேறு + உண்டோ
**விதிகள்:** வேறு + உண்டோ
(i) **'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'** என்ற விதிப்படி 'வேற்ற் + உண்டோ' என்றானது.
(ii) **'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி புணர்ந்து **'வேறுண்டோ'** என்றானது.



**பாடல்**

**மூண்டுவரும் கவிதைவெறிக் குணவாய் எங்கள்**
**முத்தமிழே! நீயுள்ளாய்; முன்னம் ஓர்நாள்**
**பாண்டியரின் சங்கத்தில் கொலுவி ருந்தாய்!**
**பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்தாய்!**
**மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு**
**மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!**
**கூண்டதனை உடைத்தெழுந்த சிங்கம் போலக்**
**குளிர்பொதிகைத் தென்தமிழே! சீறி வா, வா!**

**தெரிந்து தெளிவோம்**

1. **முதல் ஏழு வள்ளல்கள்:** குமணன், சகரன், சகாரன், செம்பியன், துந்துமாரி, நளன், நிருதி
2. **இடையெழு வள்ளல்கள்:** அக்ரூரன், அந்திமான், சந்திமான், சந்தன், கர்ணன், சிசுபாலன், தந்திவக்கிரன்
3. **கடையெழு வள்ளல்கள்:** பாரி, ஓரி, காரி, ஆய், அதியமான், நள்ளி, பேகன்

**சொல்லும் பொருளும்**

| | |
|---|---|
| மூண்டுவரும் கவிதை வெறிக்கு உணவாய் | – உள்ளத்தில் பொங்கிப் பெருகும் கவிதை உணர்வுகளுக்கு உயிராக இருக்கின்றாய் |
| எங்கள் முத்தமிழே நீயுள்ளாய் | – இயல், இசை, நாடகம் என்ற மூன்று தமிழாக நீ இருக்கின்றாய் |
| பாண்டியரின் சங்கத்தில் | – பாண்டிய மன்னர்களின் தமிழ்ச் சங்கத்தின் |
| கொலுவிருந்து | – அரியணையில் அமர்ந்திருந்தாய் |
| பாரி முதல் வள்ளல்களை | – பாரி முதலான கொடை வள்ளல்கள் பலரை |
| ஈன்று தந்தாய் | – உன் புதல்வர்களாகப் பெற்றுக் கொடுத்துள்ளாய் |
| மீண்டும் அந்தப் பழமை நலம் | – அத்தகைய பொற்காலம் மீண்டும் |
| புதுக்குதற்கு மெய்சிலிர்க்க | – அமைவதற்கு உடல்சிலிர்க்க |
| தமிழ்க்குயிலே கூவி வா, வா! | – தமிழாகிய குயிலே இன்னிசை எழுப்பி வருவாயாக |
| கூண்டு அதனை உடைத்து எழுந்த | – தன்னை அடைத்து வைத்துள்ள கூண்டினை உடைத்துவிட்டு வெளியே வரும் |
| சிங்கம் போல | – சிங்கத்தைப் போன்று |
| குளிர்பொதிகை | – குளிர்ச்சியான பொதிகை மலையைப் போன்ற |
| தென்தமிழே சீறி வா, வா | – தென்னகத்தின் தமிழ்மொழியே, வீரத்துடன் வருவாயாக. |


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

## பொருளுரை

முத்தமிழே! எங்கள் உள்ளத்தில் பொங்கிப் பெருகும் கவிதை உணர்வுகளுக்கு உயிராக இருக்கின்றாய். பாண்டிய மன்னர்கள் அமைத்திருந்த தமிழ்ச்சங்கத்தின் அரியணையில் வீற்றிருந்தாய். பாரி முதலான வள்ளல்கள் பலரைப் பெற்றுத் தந்துள்ளாய்! ஈகைக் குணம் நிறைந்திருந்த மாந்தர்கள் வாழ்ந்திருந்த அந்தப் பொற்காலம் மீண்டும் அமைவதற்கு எங்கள் உடல் சிலிர்க்கும்படியாக தமிழாகிய குயிலே இன்னிசை பாடி வருவாயாக! தென்னகத்தின் குளிர்ச்சி பொருந்திய தமிழே, சிங்கமானது கூண்டை உடைத்துக் கொண்டு வீரத்துடன் வெளியே வருவது போல வருவாயாக!

## விரிவான விளக்கம்

'கவிதை வெறிக்கு உணவாய்' என்ற தொடரில் உணவு என்பதை உயிர் எனக் கொள்ள வேண்டும். ஒரு கவிதை பொருளற்று இருந்தால் அதற்கு மதிப்பில்லை. ஒருவரின் உயிரைக் காப்பது உணவு. கவிதை ஆற்றலை வெளிப்படுத்தும் போது அதில் **உயிர்ப்பு** இருக்க வேண்டும் என்பதால் 'உணவாய்' என்று ஆசிரியர் கூறியுள்ளார்.

முதல் ஏழு வள்ளல்கள், இடையெழு வள்ளல்கள், கடையெழு வள்ளல்கள் போன்று எண்ணற்ற வள்ளல்களுக்கு தாயாக விளங்கிய தமிழே, குயிலின் இன்னிசை போல நீ பாடி வரும் போது மீண்டும் அந்தத் தொன்மையான காலம் தோன்ற வேண்டும்.

குளிர்ச்சியான பொதிகை மலையில் (குற்றால மலை) தோன்றிய தென் தமிழே, கூண்டை உடைத்துக் கொண்டு சிங்கம் வீரத்துடன் வெளியே வருவது போல, உன் வளர்ச்சிக்கு தடைகளாய் அமைந்தவற்றை எல்லாம் தகர்த்து எறிந்து விட்டு வருவாயாக!

**அருஞ்சொற்பொருள் :**

| | |
|---|---|
| 1. மூண்டு வரும் – பொங்கிப் பெருகி வரும் | 3. ஈன்று – பெற்று |
| 2. கொலுவிருத்தல் – அரியணையில் வீற்றிருத்தல் | |

**பிரித்தெழுதுக:**

| | |
|---|---|
| 1. வெறிக்குணவாய் – வெறிக்கு + உணவாய் | 6. கூண்டதனை – கூண்டு + அதனை |
| 2. முத்தமிழ் – மூன்று + தமிழ் | 7. தென்தமிழே – தெற்கு + தமிழே |
| 3. நீயுள்ளாய் – நீ + உள்ளாய் | 8. மீண்டுமந்த – மீண்டும் + அந்த |
| 4. கொலுவிருந்தாய் – கொலு + இருந்தாய் | 9. உடைத்தெழுந்த – உடைத்து + எழுந்த |
| 5. தமிழ்க்குயிலே – தமிழ் + குயிலே | |

**இலக்கணக்குறிப்பு :**

| | |
|---|---|
| 1. முத்தமிழ் – பண்புத்தொகை | 4. எழுந்த – பெயரெச்சம் |
| 2. தமிழ்க்குயில் – உருவகம் | 5. குளிர்பொதிகை – வினைத்தொகை |
| 3. ஈன்று, சீறி, உடைத்து – வினையெச்சங்கள் | |

**பகுபத உறுப்பிலக்கணம் :**

| | |
|---|---|
| **இருந்தாய் – இரு + த் (ந்) + த் + ஆய்**<br>இரு - பகுதி<br>த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் - இறந்தகால இடைநிலை<br>ஆய் - முன்னிலை ஒருமை விகுதி | **உடைத்து – உடை + த் + த் + உ**<br>உடை - பகுதி<br>த் - சந்தி<br>த் - இறந்தகால இடைநிலை<br>உ - வினையெச்ச விகுதி |
| **ஈன்று – ஈன் + ற் + உ**<br>ஈன் - பகுதி<br>ற் - இறந்தகால இடைநிலை<br>உ - வினையெச்ச விகுதி | **எழுந்த – எழு + த்(ந்) + த் + அ**<br>எழு - பகுதி<br>த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் - இறந்தகால இடைநிலை<br>அ - பெயரெச்ச விகுதி |
| **தந்தாய் – தா(த) + த்(ந்) + த் + ஆய்**<br>தா - பகுதி 'த' எனக் குறுகியது விகாரம்<br>த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் - இறந்தகால இடைநிலை<br>ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | **சீறி – சீறு + இ**<br>சீறு - பகுதி<br>இ - வினையெச்ச விகுதி |

**புணர்ச்சி விதி :**

### குற்றியலுகரப் புணர்ச்சி

1. **வெறிக்குணவாய்** – வெறிக்கு + உணவாய்

**விதிகள்:** வெறிக்கு + உணவாய்

(i) **'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'** என்ற விதிப்படி 'வெறிக்க் + உணவாய்' என்றானது.

(ii) **'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி புணர்ந்து **'வெறிக்குணவாய்'** என்றானது.

2. **கூண்டதனை** – கூண்டு + அதனை

**விதிகள்:** கூண்டு + அதனை

(i) **'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'** என்ற விதிப்படி 'கூண்ட் + அதனை' என்றானது.

(ii) **'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி புணர்ந்து **'கூண்டதனை'** என்றானது.

3. **உடைத்தெழுந்த** – உடைத்து + எழுந்த

**விதிகள்:** உடைத்து + எழுந்த

(i) **'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'** என்ற விதிப்படி 'உடைத் + எழுந்த' என்றானது.

(ii) **'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி புணர்ந்து **'உடைத்தெழுந்த'** என்றானது.

### எண்ணுப்பெயர் புணர்ச்சி

1. **முத்தமிழ்** – மூன்று + தமிழ்

இது **எண்ணுப்பெயர் புணர்ச்சி** ஆகும்.

**விதிகள்:** மூன்று + தமிழ்

(i) **'மூன்று ஆறு ஏழ் குறுகும்'** என்ற விதிப்படி எண்ணுப் பெயரின் முதல் எழுத்து குறுகி **'முன்று + தமிழ்'** என்றானது.

(ii) **'ஈற்று உயிர்மெய்யும் ஏகும்'** என்ற விதிப்படி, நிலைமொழி ஈற்று மெய் கெட்டு **'முன் + தமிழ்'** என்றானது.

(iii) **'மூன்றன் உறுப்பு அழிவும் வந்ததும் ஆகும்'** என்ற விதிப்படி, நிலைமொழி ஈற்று 'ன'கரம் வருமொழி முதல் மெய் எழுத்தாய் திரிந்து **'முத் + தமிழ் – முத்தமிழ்'** என்றானது.

### உடம்படுமெய் புணர்ச்சி

1. **நீயுள்ளாய்** – நீ + உள்ளாய்

**விதிகள்:** நீ + உள்ளாய்

(i) **'இ ஈ ஐ வழி யவ்வும்'** என்ற விதிப்படி உடம்படு மெய்யான யகரம் தோன்றி 'நீ+ ய் + உள்ளாய்' என்றானது.

(ii) **'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி புணர்ந்து **'நீயுள்ளாய்'** என்றானது.

2. **கொலுவிருந்தாய்** – கொலு + இருந்தாய்

**விதிகள்:** கொலு + இருந்தாய்

(i) **'இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை உயிர்வழி வவ்வும்'** என்ற விதிப்படி 'கொலு+ வ் +இருந்தாய்' என்றானது.

(ii) **'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி புணர்ந்து **'கொலுவிருந்தாய்'** என்றானது.

### இயல்பீறு புணர்ச்சி

1. **தமிழ்க்குயில்** – தமிழ் + குயில்

**விதி:** தமிழ் + குயில் – **'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்'** என்ற விதிப்படி 'தமிழ் + க் + குயில்' என்று மாற்றம் பெற்று **தமிழ் குயில்** என்றானது.

### திசைப்பெயர் புணர்ச்சி

1. **தென்தமிழே** – தெற்கு + தமிழே

**விதிகள்:** தெற்கு + தமிழே

(i) **'திசையொடு பிறவும் சேரின் நிலையீற்று உயிர்மெய் நீங்கலும்'** என்ற விதிப்படி 'தெற் + தமிழே' என்றானது.

(ii) **'றகரம் னலவாகத் திரிதலும்'** என்ற விதிப்படி நிலைமொழி ஈற்று 'ற'கரம் 'ன'கரமாய்த் திரிந்து 'தென்+ தமிழே' என்று மாற்றம் பெற்று **'தென் தமிழே'** என்றானது.





orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

## கற்பவை கற்றபின்

**தமிழ்மொழிப் பாடத்தில் மொழி வாழ்த்துப் பாடல் இடம்பெறுவதன் நோக்கம் குறித்த கருத்துகளைத் தொகுத்துக் கலந்துரையாடல் நிகழ்த்துக.**

**மாணவர்கள்** : வணக்கம் ஐயா.

**ஆசிரியர்** : வணக்கம் மாணவர்களே! இன்றைய கலந்துரையாடலில் எந்தப் பொருள் குறித்து உரையாடப் போகிறீர்கள்?

**மாணவர்கள்** : ஐயா! நமது பாடப்புத்தகங்களில் முதலில் நாட்டுப்பண் அடுத்து தமிழ்த்தாய் வாழ்த்து இடம் பெற்றுள்ளன. அது குறித்து இன்று உரையாடலாம் என முடிவு செய்துள்ளோம்.

**ஆசிரியர்** : மிகவும் நன்று! எந்த ஒரு காரியத்தையும் வெற்றிகரமாக முடிப்பதற்கு இறையருளை வேண்டுவது தமிழரின் மரபாகும்.

**கயல்விழி** : ஆம் ஐயா! அதனால்தான் திருக்குறளில் முதலில் கடவுள் வாழ்த்து அமைந்துள்ளது.

**இளங்குமரன்** : அப்படியென்றால் பாடப்புத்தகத்தில் முதலில் நாட்டுப்பண்தானே அமைந்துள்ளது. இறைவாழ்த்து வரவில்லையே!

**ஆசிரியர்** : நமது இந்தியா மதசார்பற்ற நாடு. அதனால்தான் தேசத்தை முதன்மைப்படுத்தி நாட்டுப்பண்ணும், நமது மொழி வாழ்த்துப் பாடல் இரண்டாவதாகவும் அமைந்துள்ளன.

**தமிழ்ச் செல்வன்** : ஒவ்வொருவரும் தன் தாய்மொழி மீது மிகுந்த பற்றுடன் இருக்க வேண்டும். தாய்மொழி நமது உயிருக்கு நிகரானது. நம் தாய்மொழியின் தொன்மை, சிறப்பு, பெருமைகள் போன்ற யாவற்றையும் அறிந்தவரால்தான் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருக்க முடியும்.

**ஆசிரியர்** : மிக நன்றாகக் கூறினாய்! மகாத்மா காந்தியடிகள் தன் தாய்மொழி மீது மிகுந்த பற்றுடையவர். தாய்மொழியில் கற்பதே சிறந்தது என்றும் கூறியுள்ளார். தாய்மொழிப் பற்று இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் பாடநூல்களில் மொழி வாழ்த்துப் பாடல் இடம் பெறுகின்றது.

**கயல்விழி** : மொழி வாழ்த்துப் பாடலின் மூலமாக நமது மொழியின் சிறப்புகளையும் காலம் கடந்து அழியாமல் நிற்கின்ற அதன் நிலைப்புத் தன்மையையும் அறிய முடிகிறது.

**இளங்குமரன்** : அதனால்தான், தான் காணும் காட்சிகளைப் புகழ்ந்துபாட தமிழ் மொழியைத் தவிர ஏற்ற துணை வேறில்லை என்று சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் கூறியுள்ளார்.

**ஆசிரியர்** : நன்று! நன்று! தமிழ்மொழிப் பாடத்தில் மொழிவாழ்த்துப் பாடல் இடம் பெறுவதன் நோக்கத்தை இப்போது நன்கு அறிந்திருப்பீர்கள் எனக் கருதுகிறேன்.

**மாணவர்கள்** : ஆம் ஐயா! தமிழ் மொழியின் தன்னிகரில்லாத சிறப்புகளை எடுத்துக் கூறும் மொழி வாழ்த்துப் பாடல் இடம் பெறுவது பெருமைக்கு உரியது. தாய்மொழியை வணங்குவோம்! அதன் பெருமைகளை தரணியெங்கும் எடுத்துச் செல்வோம்! நன்றி ஐயா!

**ஆசிரியர்** : நன்றி மாணவர்களே!

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### பலவுள் தெரிக.

**1. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்** (பிடிஏ–4)

அ) ஒளிப்பறவை ஆ) ஒரு கிராமத்து நதி இ) சூரிய நிழல் ஈ) பூஜ்யங்களின் சங்கிலி

**விடை: ஆ) ஒரு கிராமத்து நதி**

**2. தமிழ்க்குயில் எவ்வாறு வர வேண்டும்?** (பிடிஏ–6)

அ) பாடி ஆ) சீறி இ) கூவ ஈ) ஆடி **விடை: அ) பாடி**

**3. சிற்பி பாலசுப்பிரமணியம் பாரதியார் பல்கலைக்கழகத்தில் ......... துறைத் தலைவராகப் பணியாற்றினார்.** (காலாண்டுத் தேர்வு 2019)

அ) தமிழ் ஆ) வரலாறு இ) ஆங்கிலம் ஈ) பொருளாதாரம் **விடை: அ) தமிழ்**

**4. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'இளந்தமிழே' பாடல் இடம் பெற்ற நூல் :** (மார்ச் 2020)

அ) மஸ்னவி ஆ) நிலவுப் பூ இ) காவ்யதர்சம் ஈ) துறைமுகம் **விடை: ஆ) நிலவுப் பூ**

உயிரினும் ஓம்பப் படும்


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

## குறுவினா

1. "முன்னம் ஓர்நாள் பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்'' – யார், யாரைப் பற்றி கூறியது? பிடிஏ–5

சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழ்த்தாயைப் பற்றிக்கூறியது.

## சிறுவினா

1. சிற்பி பாலசுப்பிரமணியம் – குறிப்பு வரைக. பிடிஏ–1

**சிற்பி பாலசுப்பிரமணியம் பற்றிய குறிப்புகள்:**

**ஆற்றியபணி** : பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவர்.

**ஆற்றுகின்ற பணி** : சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினர்.

**சிறப்பு** : கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர் எனப் பன்முகம் கொண்டவர்.

**விருது** : 'ஒரு கிராமத்து நதி' என்ற கவிதை நூலிற்காகவும் மொழிபெயர்ப்பு நூல் ஒன்றிற்காகவும் இரு முறை சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றுள்ளார்.

**படைப்புகள்** :

| | |
|---|---|
| கவிதை நூல்கள் | நிலவுப்பூ, ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரியநிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி முதலியவை |
| உரைநடை நூல்கள் | இலக்கியச் சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும் |
| மொழிபெயர்ப்பு நூல்கள் | மலையாளக் கவிதைகள் மற்றும் புதினங்களை மொழிபெயர்த்துள்ளார். |

**இவருடைய கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்ட மொழிகள் :** ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி.

இயல் 1

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக.

1. சிற்பி பாலசுப்பிரமணியம் என்பவர் ........
(i) கவிஞர் (ii) பேராசிரியர் (iii) மொழிபெயர்ப்பாளர் (iv) இதழாசிரியர்
அ) (i) மட்டும் (ii) சரியானவை ஆ) (i) மட்டும் (iii) சரியானவை
இ) (iii) மட்டும் (iv) சரியானவை ஈ) அனைத்தும் சரியானவை
**விடை: ஈ) அனைத்தும் சரியானவை**

2. சிற்பி பாலசுப்பிரமணியம் .......... பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார்.
அ) சென்னை ஆ) பாரதியார் இ) காமராஜர் ஈ) தஞ்சை **விடை: ஆ) பாரதியார்**

3. சிற்பி பாலசுப்பிரமணியம் எத்தனை முறை சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றுள்ளார்?
அ) ஒரு முறை ஆ) இரண்டு முறை
இ) மூன்று முறை ஈ) நான்கு முறை **விடை: ஆ) இரண்டு முறை**

4. "எம்மருமைச் செந்தமிழே! உன்னை யல்லால் ஏற்ற துணை வேறுண்டோ" என்ற அடிகள் இடம்பெற்றுள்ள கவிதை நூல் .......... .
அ) பூஜ்யங்களின் சங்கிலி ஆ) ஒளிப்பறவை
இ) நிலவுப் பூ ஈ) சர்ப்பயாகம் **விடை: இ) நிலவுப் பூ**

5. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'அலையும் சுவடும்' என்பது .......... நூலாகும்.
அ) கவிதை ஆ) மொழிபெயர்ப்பு இ) உரைநடை ஈ) புதினம் **விடை: இ) உரைநடை**

6. கருத்து 1: செந்நிறப் பூக்கள் செறிந்திருந்த வானம் போல் தொழிலாளர்களின் கை சிவந்திருந்தது.
கருத்து 2: தொழிலாளர்களின் முகத்தின் மீது வியர்வை வெள்ளம் முத்து முத்தாக இருந்தது.
அ) 1 மட்டும் சரி ஆ) 2 மட்டும் சரி
இ) 1 மற்றும் 2 சரியானவை ஈ) 1 மற்றும் 2 தவறானவை **விடை: அ) 1 மட்டும் சரி**
**சரியான கருத்து:** தொழிலாளர்களின் பருத்த தோள்கள் மீது வியர்வை வெள்ளம் முத்து முத்தாக இருந்தது.

**7.** **செம்பரிதி ......... தலையைச் சாய்ப்பான்.**

அ) வெண்மேகத்தில் ஆ) மலைமேட்டில்
இ) கடலில் ஈ) கருமேகத்தில் **விடை: ஆ) மலைமேட்டில்**

**8.** **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | செந்தமிழ் | – | 1. குளிர் பொதிகை |
| ஆ) | முத்தமிழ் | – | 2. பழமை நலம் |
| இ) | தமிழ்க்குயில் | – | 3. மூண்டுவரும் கவிதை |
| ஈ) | தென் தமிழ் | – | 4. ஏற்ற துணை |

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 2, 1, 4 இ) 2, 3, 1, 4 ஈ) 4, 1, 3, 2 **விடை: அ) 4, 3, 2, 1**

**9.** **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | செம்பரிதி | – | 1. உருவகம் |
| ஆ) | வியர்வை வெள்ளம் | – | 2. பண்புத்தொகை |
| இ) | சிவந்து | – | 3. பெயரெச்சம் |
| ஈ) | எழுந்த | – | 4. வினையெச்சம் |

அ) 2, 1, 4, 3 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 4, 1, 3, 2 **விடை: அ) 2, 1, 4, 3**

**10.** **வானமெல்லாம் நிறைந்திருந்த பூக்காட்டின் நிறம் ......... .**

அ) வெண்மை ஆ) மஞ்சள் இ) சிவப்பு ஈ) நீலம் **விடை: இ) சிவப்பு**

**11.** **செம்பரிதி என்பது ......... விதி ஆகும்.**

அ) உடம்படுமெய் புணர்ச்சி ஆ) குற்றியலுகரப் புணர்ச்சி
இ) பண்புப்பெயர் புணர்ச்சி ஈ) இயல்பீறு புணர்ச்சி **விடை: இ) பண்புப்பெயர் புணர்ச்சி**

**12.** **விம்மு + கின்று + அ என்பதில் 'கின்று' என்பது ......... .**

அ) இறந்தகால இடைநிலை ஆ) நிகழ்கால இடைநிலை
இ) எதிர்கால இடைநிலை ஈ) எதிர்மறை இடைநிலை **விடை: ஆ) நிகழ்கால இடைநிலை**

**13.** **"விம்முகின்ற தோள்மீதில் முத்துமுத்தாய் வீற்றிருக்கும்" இவ்வடியில் பயின்று வந்துள்ள அணி ........**

அ) உவமை அணி ஆ) உருவக அணி
இ) எடுத்துக் காட்டு உவமை அணி ஈ) உயர்வு நவிற்சி அணி **விடை: அ) உவமை அணி**

## குறுவினா

**1.** **சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய உரைநடைநூல்கள் யாவை?**

**சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய உரைநடைநூல்கள்:**

(i) இலக்கியச் சிந்தனைகள், (ii) மலையாளக் கவிதை, (iii) அலையும் சுவடும்.

**2.** **தொழிலாளர்களின் கைகள் எதனைப் போல் சிவந்திருப்பதாக சிற்பி கூறுகிறார்?**

கதிரவன் மாலைநேரத்தில் மறையும் போது வானம் முழுவதும் செந்நிறப் பூக்கள் செறிந்து காணப்படுவது போல் சிவந்து இருக்கும். அதனைப் போல் தொழிலாளர்களின் கைகள் சிவந்திருப்பதாக சிற்பி கூறுகிறார்.

**3.** **'முத்தமிழே நீயுள்ளாய்' என்று எதற்காகக் கவிஞர் சிற்பி கூறுகிறார்?**

"உள்ளத்தில் பொங்கி பெருகி வரும் கவிதை உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு இயல், இசை, நாடகம் என்று மூன்று தமிழாக எங்கள் உயிராக இருக்கிறாய்" என்று சிற்பி கூறுகிறார்.

**4.** **தமிழ்க்குயிலை இன்னிசைப் பாடிவருமாறு கவிஞர் சிற்பி ஏன் அழைக்கிறார்?**

"பாரி முதலான வள்ளல்கள் பலரை ஈன்றெடுத்த தமிழ்த்தாயே! அவர்கள் வாழ்ந்த அந்தப் பொற்காலம் மீண்டும் அமைவதற்கு உடல் சிலிர்க்குமாறு தமிழ்க்குயிலாக மாறி இன்னிசைப் பாடி வருவாயாக!" என்று கவிஞர் சிற்பி அழைக்கிறார்.

**5.** **கவிஞர் தென்தமிழை எவ்வாறு வரச்சொல்கிறார்?**

"சிங்கமானது, தன்னை அடைத்து வைத்துள்ள கூண்டினை தகர்த்து எறிந்து விட்டு வீரத்துடன் வெளிவருவது போல தென்தமிழே நீ வருவாயாக!" என்று கவிஞர் கூறுகிறார்.




orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com
www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


6. **'தென் தமிழே! சீறி வா, வா!' என்பதில் கூறப்பட்ட உவமை நயம் யாது?**

சிங்கம் கூண்டினை உடைத்துக் கொண்டு வீரத்துடன் வெளிவருவது உவமையாகும். இதே போல், குளிர் பொதிகையில் வளர்ந்த தென்தமிழ் தன்னுடைய வளர்ச்சிக்குத் தடையாய் இருப்பவைகளை நீக்கி விட்டு வீறு கொண்டு எழுந்து வரவேண்டும் என்பது உவமேயம்.

7. **சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய கவிதை நூல்களில் சிலவற்றை எழுதுக.**

**சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய கவிதை நூல்களில் சில:**

நிலவுப் பூ, ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்ஜியங்களின் சங்கிலி.

### சிறுவினா

1. **"பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்**
**பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்தாய்"- இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம்** : இப்பாடலடிகள் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'நிலவுப் பூ' என்ற கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

**பொருள்** : பாண்டிய மன்னர்கள் அமைத்திருந்த தமிழ்ச் சங்கத்தில் அரியணையில் வீற்றிருந்த தமிழன்னையே! பாரி முதலான வள்ளல்கள் பலரை இந்த உலகிற்குக் கொடுத்துள்ளாய்!

**விளக்கம்** : பாண்டிய மன்னர்கள் முச்சங்கம் அமைத்து தமிழ்மொழியை வளர்த்தனர். அவர்களின் சங்கத்தில் அரசியாக கொலுவிருந்த தமிழன்னையே! புலவர்களையும் வறியவர்களையும் பேணிக் காத்த, கொடைப் பண்புகள் மிகுந்திருந்த பாரி முதலான வள்ளல்கள் பலரை இவ்வுலகிற்கு அளித்தாய்!

☆ ☆ ☆



உயிரினும் ஓம்பப் படும் - மொழி

# இயல் 1 தமிழ்மொழியின் நடை அழகியல்

- தி.சு நடராசன் உரைநடை உலகம்

### கரு

* உயர்தனிச் செம்மொழியாம் தமிழில் இழுமெனும் மொழியால் விழுமியது பயக்கும் வகையில் இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன.
* கவிதைகளை கற்போர் இதயம் கனியும் வகையில் படைக்கும் இயல்பு பண்டைய கவிஞர்களுக்கு இயல்பாகவே இருந்தது.
* சங்க இலக்கியம் சில அழகியல் பரிமாணங்களை வரித்துக் கொண்டுள்ளது.
* மொழிசார்கலை, கலை முழுமை, நடையியல் விளக்கம், ஒலிக்கோலங்கள், சொற்புலம் மற்றும் தொடரியல் போக்குகள் ஆகியன பற்றி விரித்துரைக்கிறது இவ்வுரைநடைப்பகுதி.

### ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | தி.சு. நடராசன் |
| ஊர் | : | திருத்தங்கல் (விருதுநகர்) |
| பணியாற்றிய பல்கலைக்கழகங்கள் | : | மதுரை காமராசர் பல்கலைக்கழகம், போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகம், திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம். |
| பணி | : | தமிழ்ப் பேராசிரியர் |
| படைப்புகள் | : | கவிதையெனும் மொழி, திறனாய்வுக் கலை, தமிழ் அழகியல், தமிழின் பண்பாட்டு வெளிகள். |
| இலக்கியப் பணிகள் | : | சாகித்திய அகாதெமியின் பொதுக் குழு உறுப்பினர். ஞான பீடம் விருது தேர்வுக்குழு உறுப்பினர். |
| சிறப்பு | : | திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களுள் குறிப்பிடத்தக்கவர். சிறந்த திறனாய்வாளர். |
| விருது | : | திறனாய்வுக் கலை என்ற நூலுக்காகத் தமிழக அரசின் விருதினைப் பெற்றுள்ளார். |


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

## கற்பவை கற்றபின்

**1. கவிஞர் பாரதிதாசனின் அழகின் சிரிப்பு - குன்றம் - ஒளியும் குன்றும் பாடலில் இடம்பெற்றுள்ள நடைச் சிறப்பினைத் தொகுத்து உரையாக வழங்குக.**

பாரதிதாசன் அழகின் சிரிப்பு கவிதையை மிக அழகாக எளிய நடையில் ஒரு குழந்தையின் சிரிப்பைப் போல் காட்சிப்படுத்தி இருக்கிறார். குன்றம் என்றால் மலை. குன்றம் பற்றி அழகின் சிரிப்பு என்னும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

| பாடல் | நடைச்சிறப்பு |
|---|---|
| தங்கத்தை உருக்கிவிட்ட<br>வானோடை தன்னிலே ஓர்<br>செங்கதிர் மாணிக்கத்துச்<br>செழும்பழம் முழுகும் மாலை<br>செங்குத்தாய் உயர்ந்த குன்றின்<br>மரகதத் திருமேனிக்கு<br>மங்காத பவளம் போர்த்து<br>வைத்தது வையம் காண! | தங்கத்தை உருக்கி விட்டதுபோலத் தோன்றும் வானத்து ஓடையில், செங்கதிர் மூழ்கும் நேரம் மாலைக் காலம். மரகதம் என்பது பச்சை நிறக் கல். பச்சை மலையில் பவளத்தைப் போர்த்தியது போல, மாலைக்கதிரானது குன்றத்தில் மறைவதாக கவிஞர் பாரதிதானே வெகு அழகாக வருணனை செய்கிறார். |
| அருவிகள், வயிரத் தொங்கல்!<br>அடர்செடி, பச்சைப்பட்டே!<br>குருவிகள், தங்கக்கட்டி!<br>குளிர்மலர், மணியின் குப்பை!<br>எருதின்மேற் பாயும் வேங்கை,<br>நிலவுமேல் எழுந்த மின்னல்,<br>சருகெல்லாம் ஒளிசேர் தங்கத்<br>தகடுகள் பாரடா நீ! | அருவிகள் வயிரமாலையாகவும், அடர்ந்த செடிகள் பச்சைப்பட்டுத் துணிகளாகவும், குருவிகள் தங்கக்கட்டிகளாகவும், குளிர்ந்த மலர்கள் மாணிக்கக் கற்களின் குவியலாகவும், காட்சியளிக்கின்றன என்கிறார் கவிஞர். மேலும், எருதின் மேல் பாயும் வேங்கை போல, நிலவின் மேல் எழுந்த மின்னல் போல, சருகுகளின் மேலே ஒளி பட்டு தங்கத் தகடுகளாக தோன்றுவதாக பாரதிதாசன் கூறுகிறார்.<br>அனைவரும் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் புதுக்கவிதை வடிவில் படைத்துள்ளார். இந்தப் பாடலில் உள்ள சொற்களில் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன. இயற்கை வருணனையானது அழகுற அமைந்துள்ளது. புதுக்கவிதை வடிவமைப்பில் எளிய நடையில் இருக்கிறது. |

**2. தமிழின் சொல்வளத்தை வெளிப்படுத்தும்படியாக யானை/மலர் குறித்த பல சொற்களை அகராதியில் கண்டு பட்டியலிடுக.**

(i) **யானை குறித்த பல சொற்கள் :** களிறு, களபம், மாதங்கம், ஆனை, கும்பி, தும்பி, போதகம், மதகயம், பிடி, கரிணி, வடவை, அதவை, குஞ்சரம், வல்விலங்கு, கைம்மா (துதிக்கையுடைய விலங்கு)

(ii) **மலர் குறித்த பல சொற்கள் :** பூ, அரும்பு, முகை, மொட்டு, மொக்குள், அலரி.

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### சிறுவினா

**1. கவிதை மறுதலைத் தொடரைச் சான்றுடன் விளக்குக.** பிடிஏ–6; செப். 2020

(i) உரைநடை வழக்கு, பேச்சுவழக்கு உள்ளிட்ட இயல்பு வழக்கில் தொடர் அமைப்பானது,

(ii) எழுவாய் + செயப்படுபொருள் (அல்லது) பிற அமைப்பு + பயனிலை என்றிருப்பது மரபாகும். ஆனால் சங்கப் பாடல்களில் இது பிறழ்ந்து வருகின்றது. இவ்வாறு பிறழ்ந்து வரும் அமைப்பு **'மறுதலைத் தொடர்'** எனப்படுகிறது. பாடலின் இறுதியில் தொடரியல் பிறழ்வு நிலை பெரும்பாலும் காணப்படுகிறது.

**(எ.கா)** பாண்டிய மன்னன் நம்பி நெடுஞ்செழியனின் இறுதிச் சடங்கில் சர்ச்சை ஏற்பட்ட போது பேரெயின் முறுவலார் பாடிய பாடலின் இறுதிப் பகுதி, தொடரியல் பிறழ்வுடன் அமைந்துள்ளது.

"இடுக வொன்றோ, சுடுகவொன்றோ;
படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே" - புறநானூறு.

(iii) இப்பாடல் **'தொடியுடைய தோள் மணந்தனன்'** எனத் தொடங்கி, ஏனைய 20 அடிகளில் தனித்தனியே வினைமுற்றுகளோடு முடிகின்றன. பாண்டிய மன்னனின் **18 பண்புகளை** வரிசைப்படுத்திய பின்பு 'ஆங்குச் செய்பவெல்லாம் செய்தனன் ஆதல்' என்று கூறிவிட்டு **"புதைத்தால், புதை; சுட்டால் சுடு"** என்ற புலவர் கூறுகிறார்.

உயிரினும் ஓம்பப் படும்


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

மார்ச் – 2020

2. **கலைமுழுமை என்றால் என்ன? விளக்குக.**

(i) அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பயன்களும் இருக்கும்படியாக இலக்கியம் உருவாக்கப்பட வேண்டும் என்று தொல்காப்பியர் சுட்டிக்காட்டியுள்ளார். இது கலை முழுமை எனப்படுகிறது.

(ii) சங்க இலக்கியத்தில் அகத்திணையும் புறத்திணையும் பாடற்பொருளாக அமைந்துள்ளன. தொல்காப்பியம் அகன் ஐந்திணைகளை இன்பம், பொருள், அறம் ஆகிய அறவியல் கருத்துகளோடு இணைத்துள்ளது. தொல்காப்பியத்தில் வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா ஆகிய நான்கு பாவகைகளும் குறிப்பிடப்பட்டு, அதனுடன் அறவியல் கருத்துகளும் இணைக்கப்பட்டுள்ளன.

(iii) "அந்நில மருங்கின் அறமுதலாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப" (தொல். செய்யுளியல்)

மும்முதற் பொருள் என்பது அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றுமாகும்.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **தி.சு. நடராசன் எழுதிய நூல்**
அ) தமிழ் அழகியல் ஆ) கானல்வரி
இ) பிறந்தது எப்படியோ ஈ) தமிழா நினைத்துப்பார் **விடை: அ) தமிழ் அழகியல்**

2. **தி.சு. நடராசனால் எழுதப்படாத நூல்**
அ) கவிதையெனும் மொழி ஆ) திறனாய்வுக் கலை
இ) தமிழ் அழகியல் ஈ) பிறந்தது எப்படியோ **விடை: ஈ) பிறந்தது எப்படியோ**

3. **'இடுக வென்றோ, சுடுக வென்றோ;
படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே' என்ற வரிகள் இடம்பெற்ற நூல்**
அ) புறநானூறு ஆ) குறுந்தொகை
இ) பரிபாடல் ஈ) அகநானூறு **விடை: அ) புறநானூறு**

4. **போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர்**
அ) தி.சு.நடராசன் ஆ) தேவதேவன்
இ) தெ.பொ. கிருஷ்ணசாமி ஈ) தி.ஜானகிராமன் **விடை: அ) தி.சு.நடராசன்**

5. **திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் ஒருவர்**
அ) மயிலை சீனி. வேங்கடசாமி ஆ) பொ.வே. சோமசுந்தரனார்
இ) தி.சு.நடராசன் ஈ) மறைமலையடிகள் **விடை: இ) தி.சு.நடராசன்**

6. **எழுத்தையும் சொல்லையும் போன்று செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாக கருதும் நூல் ........... .**
அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல்
இ) தண்டியலங்காரம் ஈ) வீரசோழியம் **விடை: அ) தொல்காப்பியம்**

7. **கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் என்று எதில் குறிப்பிடப்படுகிறது?**
அ) கலை முழுமை ஆ) மொழிசார் கலை
இ) நடையியல் ஈ) ஒலிக்கோலங்கள் **விடை: ஆ) மொழிசார் கலை**

8. **பாவகைகளுடன் அறவியல் கருத்துகளும் இடம்பெற்றுள்ள நூல் ........... .**
அ) நன்னூல் ஆ) தண்டியலங்காரம்
இ) அகத்தியம் ஈ) தொல்காப்பியம் **விடை: ஈ) தொல்காப்பியம்**

9. **கவிதையின் இயங்காற்றல் ........... ஆகும்.**
அ) ஒலிக்கோலங்கள் ஆ) நடையியல்
இ) சொற்புலம் ஈ) தொடரியல் போக்குகள் **விடை: ஆ) நடையியல்**

10. **நம்பி நெடுஞ்செழியனுடைய இறுதிச் சடங்கின் நிகழ்வுகளைப் பாடியவர் .......... .**
அ) பேரெயின் முறுவலார் ஆ) நக்கீரர்
இ) கபிலர் ஈ) பரணர் **விடை: அ) பேரெயின் முறுவலார்**

11. **'தொடியுடைய தோள் மணந்தனன்' என்று புகழ்ப்பட்ட மன்னன் .......... .**
அ) நின்றசீர் நெடுமாறன் ஆ) நம்பி நெடுஞ்செழியன்
இ) உக்கிரப் பெருவழுதி ஈ) செண்பகப் பாண்டியன் **விடை: ஆ) நம்பி நெடுஞ்செழியன்**

இயல் 1

**12.** **காளைகளில் பல இனங்களைக் காட்டுகிற சொற்கள் .......... நிரம்பியுள்ளன.**
அ) குறிஞ்சிக்கலியில் ஆ) முல்லைக்கலியில்
இ) மருதக்கலியில் ஈ) நெய்தற்கலியில் **விடை: ஆ) முல்லைக்கலியில்**

**13.** **ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர்களில் குறிப்பிடும் நூல் .......... .**
அ) கிடை ஆ) கோபால்லபுரத்து மக்கள்
இ) கதவு ஈ) பெண்மனம் **விடை: அ) கிடை**

**14.** **கருத்து 1: சங்கப்பாடல்களில் தொடரமைப்பு பிறழ்ந்து வருவது 'கவிதை மறுதலைத் தொடர்' எனப்படுகிறது.**
**கருத்து 2: பாடலின் இறுதியில்தான் தொடரியல் பிறழ்வு நிலை பெரிதும் காணப்படுகிறது.**
அ) 1 மட்டும் சரி ஆ) 1 மற்றும் 2 சரியானவை
இ) 2 மட்டும் சரி ஈ) 1 மற்றும் 2 தவறானவை **விடை: ஆ) 1 மற்றும் 2 சரியானவை**

**15.** **பொருத்துக.**
அ) அறம், பொருள், இன்பம் - 1. தொகைமொழி
ஆ) அழகியல் நெறி - 2. ஒலிப்பின்னல்
இ) ஓசையும் பொருளும் - 3. பண்பாட்டு இலச்சினை
ஈ) நீர்படு பசுங்கலம் - 4. இலக்கியத்தின் பயன்
அ) 4, 3, 2, 1 ஆ) 3, 2, 1, 4 இ) 3, 2, 4, 1 ஈ) 2, 1, 4, 3 **விடை: அ) 4, 3, 2, 1**

**16.** **தொகைநிலை குறித்து தொல்காப்பிய .......... பேசுகிறது.**
அ) எச்சவியல் ஆ) மரபியல்
இ) கிளவியாக்கம் ஈ) புறத்திணையியல் **விடை: அ) எச்சவியல்**

**17.** **"கடந்தடு தானை மூவிருங் கூடி" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலில், அதிகமாக அமைந்துள்ளவை .......... .**
அ) வல்லின மெய்கள் ஆ) மெல்லின மெய்கள்
இ) இடையின மெய்கள் ஈ) உயிர்நெடில் **விடை: அ) வல்லின மெய்கள்**

**18.** **பேரெயின் முறுவலார், நம்பி நெடுஞ்செழியனைப் பற்றி பாடிய பாடலில் .......... பண்புகளைப் வரிசைப்படுத்தியுள்ளார்.**
அ) 16 ஆ) 17 இ) 18 ஈ) 20 **விடை: இ) 18**

**19.** **தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்கு முதன்மை ஆதாரமாக விளங்குவது .......... .**
அ) சங்க இலக்கியம் ஆ) சிற்றிலக்கியம்
இ) காப்பிய இலக்கியம் ஈ) பக்தி இலக்கியம் **விடை: அ) சங்க இலக்கியம்**

**20.** **"ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை**
**வெண்பா நடைத்தே கலி" என்ற தொடர் இடம் பெற்றுள்ள நூல் .......... .**
அ) தொல்காப்பியம் ஆ) கலித்தொகை
இ) நன்னூல் ஈ) தண்டியலங்காரம் **விடை: அ) தொல்காப்பியம்**

## குறுவினா

**1.** **மொழிசார் கலையின் சிறப்பு பண்பு எது?**
(i) ஏனைய கலைகளிலிருந்து கவிதைக் கலையை வேறுபடுத்துவதே மொழிசார் கலையின் சிறப்புப் பண்பாகும்.
(ii) கிரேக்கம், வடமொழி முதலிய பிறமொழிகளை விட தமிழ் மொழி இப்பண்பினை நன்கு, வெளிப்படுத்துகிறது.

**2.** **இலக்கியம் தனக்குரிய அழகியல் சாதனமாக எவற்றை மாற்றிக் கொள்கிறது?**
(i) பேசுபவன், கேட்பவன் ஆகியோருடைய தனிப்பட்ட சூழல்கள்
(ii) பேசும்போதும் கேட்கும் போதும் அமைகின்ற தனிச்சூழல்கள்
(iii) வரலாறு.

**3.** **தமிழ் மொழியின் இயல்புவழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?**
(i) உவமம் (ii) உருவகம் (iii) எச்சம் (iv) குறிப்பு (v) உள்ளுறை (vi) இறைச்சி

**4.** **இலக்கிய உருவாக்கத்தில் இடம்பெற வேண்டிய பயன்கள் யாவை?**
அறம், பொருள், இன்பம் ஆகியவை இலக்கிய உருவாக்கத்தில் இடம் பெறவேண்டிய பயன்களாகும்.

**5.** **கலை முழுமை பற்றி தொல்காப்பியம் சுட்டிக் காட்டியுள்ளவற்றை எழுதுக.**
இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்து நிலைகளை இலக்கியத்தைப் படைக்கும் போதே இணைத்திருக்க வேண்டும் என்று தொல்காப்பியம் சுட்டிக்காட்டியுள்ளது. இதுவே கலை முழுமையாகும்.




orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


6. **சங்க இலக்கியத்தின் பாடற்பொருள்கள் யாவை?**
**சங்க இலக்கியத்தின் பாடற்பொருள்கள்:**
(i) அகத்திணை சார்ந்த செய்திகள் (ii) புறத்திணை சார்ந்த செய்திகள்

7. **கவிதையின் நடையியல் கூறுகள் யாவை?**
**கவிதையின் நடையியல் கூறுகள்:** (i) ஒலிக்கோலங்கள் (ii) சொற்புலம் (iii) தொடரியல் போக்குகள்

8. **கவிதையின் உந்துசக்திகளாக அமைபவை யாவை?**
**கவிதையின் உந்துசக்திகள்:** (i) மொழியின் தனிச்சிறப்புக் கூறுகள் (ii) கையாளும் வகைமைகள்

9. **ஒலிப்பின்னல் என்றால் என்ன?**
ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்ளும் அமைப்பே ஒரு பாடலின் ஒலிப்பின்னல் எனப்படுகிறது.

10. **சொல்லில் பொதிந்து கிடப்பவை யாவை?**
**சொல்லில் பொதிந்து கிடப்பவை:**
(i) உணர்வு (ii) பொருள் (iii) கலை (iv) பண்பாடு (v) வரலாறு (vi) அரசியல்

11. **தமிழில் உள்ள சில தொகைமொழிகளை கூறுக.**
வைகுறு விடியல், கன்னி விடியல், புல்லென் மாலை, நள்ளென் யாமம், காமர் வனப்பு, மாண்கவின் காண்டகு வனப்பு, கவினுறு வனப்பு, தீநீர், நெடுநீர், சின்னீர், பனிநீர், ஒலி வெள்ளருவி, பறைக்குரல் எழிலி, பொய்படு சொல், நகைக்கூட்டம், ஓவச் செய்தி....

12. **நடையியல் எவற்றைச் சார்ந்துள்ளது? அதற்கான முதன்மை ஆதாரமாக விளங்குவது எது?**
(i) கவிதைகளின் வடிவமைப்புப் பகுதிகள் மற்றும் முழுமை ஆகியவற்றையே நடையியல் சார்ந்துள்ளது.
(ii) நடையியலின், இத்தகைய தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்கு முதன்மை ஆதாரமாக விளங்குவது சங்க இலக்கியம் ஆகும்.

13. **நடை என்ற சொல் தொல்காப்பியத்தில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?**
**தொல்காப்பியம் 'நடை' என்ற சொல்லை கையாண்டுள்ள விதம்:**

'நடையெற்றியலும்' (கிளவியாக்கம் - 26)
'நடை நவின்றொழுகும்' (செய்யுளியல் - 135)
'ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை
வெண்பா நடைத்தே கலி' (செய்யுளியல் - 107)

## சிறுவினா

1. **அறவியல் கருத்துகள் தொல்காப்பியத்தில் எவ்வாறு கையாளப்பட்டுள்ளன?**
(i) புணர்தல், பிரிதல் முதலான அகன் ஐந்திணைகளை தொல்காப்பியம் அறம், பொருள், இன்பம் ஆகிய அறவியல் பொருள்களோடு இணைத்துள்ளது.
(ii) வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நான்கு பாவகைகளும் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பொருள்களுக்கும் உரியன என்று அறவியல் கருத்துகளுடன் இணைத்துள்ளது.

2. **சொல்வளத்தில் அமைந்து வருவன குறித்து எழுதுக.**
**சொல்வளத்தில் அமைந்து வருவன**
(i) ஒரு பொருள் குறித்து வரும் பல சொற்கள்
(ii) பல பொருள்கள் குறித்து வரும் ஒரு சொல்
(iii) பலதுறைகள், பல சூழல்கள், பல புனைவுகள் ஆகியவற்றிற்கு உரியதாய் வருவன
(iv) உணர்வும் தெளிவும் கொண்டதாக வருவன.

3. **கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் என்றால் என்ன?**
(i) இலக்கியம் என்ற மொழிசார் கலை, மொழியின் தனித்துவமான பண்புகளை இயன்ற மட்டும் தனக்குரியதாக்கிக் கொள்கிறது.
(ii) இலக்கியத்திற்கு ஒரு சிறப்புத்தன்மையைத் தந்துவிடுகிறது.
(iii) இத்தகைய தன்மைதான், கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் என்று பேசப்படுகிறது.
(iv) இதனால் மொழிசார்ந்த பொருள், மொழிசார்ந்த கலையாக ஆகிவிடுகிறது.



orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

**4. தொகைமொழிகள் – சிறுகுறிப்பு வரைக.**

**தொகைமொழிகள்**

(i) சங்க இலக்கிய மொழியின் அடையாளமான இப்பண்பினை **'தொகைநிலை'** என்று தொல்காப்பிய எச்சவியல் குறிப்பிட்டுள்ளது.

(ii) 'நீர்படுகின்ற பசுமையான கலம்' அல்லது 'நீர்பட்ட பசுமையான கலம்' என்பது தொகாமல் வருகின்ற தொடர்மொழி ஆகும்.

(iii) 'நீர்படு பசுங்கலம்' என்பது தொகைமொழி ஆகும்.

(iv) தமிழில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொகைமொழிகள் உள்ளன.

☆ ☆ ☆

உயிரினும் ஓம்பப் படும் – மொழி

# இயல் 1

# தன்னேர் இலாத தமிழ்

தண்டியலங்கார உரைமேற்கோள் பாடல் - தண்டி

கவிதைப்பேழை

## கரு

* வானம் அளந்தது அனைத்தையும் அளக்கும் வலிமை மிக்கது தமிழ்.
* தமிழின் பரப்பபையும், விரிவையும் ஆழத்தையும் புலவர் பலவாறு போற்றுவர்.
* உலகத்தின் புற இருளை போக்கும் கதிரவனையும் அக இருளை போக்கும் தமிழையும் ஒப்புமைப்படுத்தியும் வேறுபடுத்தியும் காட்டிய தண்டியாரின் பாடல் நமக்கு தரப்பட்டுள்ளது.

## ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | தண்டி |
| காலம் | : | கி.பி. (பொ.ஆ) 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | சோழநாட்டைச் சேர்ந்தவர் |

## நூற்குறிப்பு



தமிழ் மொழியின் ஐவகை இலக்கணங்களான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகியவற்றுள் அணி இலக்கணத்தைப் பற்றி மட்டும் கூறும் நூல் தண்டியலங்காரம் ஆகும்.

**காவியதர்சம்** என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**நூல் அமைப்பு :** இந்நூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல், என்ற மூன்று பெரும் பிரிவுகளை உடையது.

**பாடப்பகுதி :** பொருளணியியல் பகுதியில் இடம் பெற்றுள்ள பாடல் பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

## பாடல்

**ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது**
**தன்னேர் இலாத தமிழ்!**

## சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| ஓங்கலிடை வந்து | – உயர்ந்த மலையின் மீது தோன்றி |
| உயர்ந்தோர் தொழ விளங்கி | – பண்பில் சிறந்த சான்றோர்கள் வணங்குமாறு தோன்றி |
| ஏங்கல் ஒலி நீர் | – ஆரவார ஒலியை எழுப்பும் கடல் நீர் சூழப்பட்ட |
| ஞாலத்து இருள் அகற்றும் | – உலகின் இருளை நீக்கும் |





orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

| | |
|---|---|
| ஆங்கவற்றுள் | – அப்படி இருக்கக் கூடியவற்றுள் |
| மின்னேர் | – மின்னலுக்கு நிகரான ஒளியைத் தருகின்ற |
| தனியாழி | – ஒற்றைச் சக்கரத்துடன் |
| வெங்கதிர் ஒன்று | – வெம்மையான சூரியன் ஒன்றாகும் |
| ஏனையது | – மற்றொன்று |
| தன்னேர் இலாத தமிழ் | – தனக்கு நிகரில்லாத தமிழ் மொழியாகும். |

## பொருளுரை

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது ஒன்று. பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புவமை இல்லாததுமாக விளங்குவது மற்றொன்று. இருளைப் போக்கும் இவ்விரண்டில் ஒன்று ஒளிர்கின்ற கதிரவன்; மற்றொன்று தனக்கு நிகரில்லாத தமிழ் மொழி.

## விரிவான விளக்கம்

உலகின் இருளான புற இருளை அகற்றுவது சூரியன். மக்களின் அறியாமை என்னும் இருளை அகற்றுவது தமிழ். சூரியன் இல்லாவிட்டால் உலகின் இயக்கம் நடைபெறாது. தமிழ்மொழி இல்லாவிட்டால் மக்களின் வாழ்க்கை பண்பட்டு விளங்காது. எனவேதான் நன்றி மறவாப் பண்புடைய சான்றோர்கள் சூரியனையும் தமிழையும் வணங்குகிறார்கள்.

மின்னல் போன்ற ஒளியினை சூரியன் தருகிறது. எனவே 'மின்னேர் தனியாழி வெங்கதிர்' என்று சூரியனை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். சூரியனுக்கு உவமையாகக் கூற மின்னல் இருக்கிறது. ஆனால் தமிழுக்கு நிகரான உவமையைக் கூற எதுவுமேயில்லை. எனவே தான் 'தன்னேர் இலாத தமிழ்' என்று பெருமையுடன் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.



### அருஞ்சொற்பொருள் :

| | |
|---|---|
| 1. ஓங்கல் – மலை | 5. ஞாலம் – உலகம் |
| 2. தொழ – வணங்க (பெரிய தோள்கள்) | 6. வெங்கதிர் – வெம்மையான கதிர்களை உடைய சூரியன் |
| 3. ஏங்கல் – கடல் | 7. மின்னேர் – மின்னலுக்கு நிகரான |
| 4. ஒலி – ஆரவாரம் | 8. தன்னேர் – தனக்கு நிகரான |

### பிரித்தெழுதுக :

| | |
|---|---|
| 1. ஓங்கலிடை – ஓங்கல் + இடை | 4. ஆங்கவற்றுள் – ஆங்கு + அவற்றுள் |
| 2. ஏங்கொலி – ஏங்கல் + ஒலி | 5. தனியாழி – தனி + ஆழி |
| 3. இருளகற்றும் – இருள் + அகற்றும் | 6. வெங்கதிர் – வெம்மை + கதிர் |

### இலக்கணக்குறிப்பு :

| | |
|---|---|
| 1. வெங்கதிர் – பண்புத்தொகை ஆக. 2021 | 4. இருளகற்றும் – இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| 2. உயர்ந்தோர் –வினையாலணையும் பெயர் | 5. மின்னேர், தன்னேர் – நான்காம் வேற்றுமைத் தொகைகள் |
| 3. இலாத – 'இல்லாத' என்பதன் இடைக்குறை | 6. விளங்கி, வந்து – வினையெச்சங்கள் |

### பகுபத உறுப்பிலக்கணம் :

**உயர்ந்தோர் – உயர் + த்(ந்) + த் + ஓர்** பிடிஏ–3
உயர் – பகுதி
த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி

**வந்து – வா(வ) + த்(ந்) + த் + உ**
வா – பகுதி 'வ' எனக் குறுகியது விகாரம்
த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

**விளங்கி – விளங்கு + இ** பிடிஏ–3
விளங்கு – பகுதி
இ – வினையெச்ச விகுதி

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

இயல் 3

சுற்றத்தார் கண்ணே உள - பண்பாடு

# தமிழர் குடும்ப முறை

உரைநடை உலகம்

கரு

* குடும்பம் எனும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் எனும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. சங்க காலத்தில் மேலோங்கி இருந்த குடும்ப அமைப்பு இன்று வரை தொடர்கிறது.
* குடும்பம், வாழிடம், மணந்தகம், தாய்வழிக்குடும்பம், தந்தை வழிக்குடும்பம், தனிக் குடும்பம், விரிந்த குடும்பம், என குடும்ப அமைப்புகளாக தமிழர்கள் இருந்ததை சங்க இலக்கியங்கள் வாயிலாக எடுத்துரைக்கிறது இவ்வுரை நடைப்பகுதி.



## கற்பவை கற்றபின்



1. **கூட்டுக்குடும்பம் - தனிக்குடும்பம் குறித்த உங்களது கருத்துகளைத் தொகுத்து உரை நிகழ்த்துக.**

**மாணவர்கள்** : வணக்கம் ஐயா.
**ஆசிரியர்** : வணக்கம் மாணவர்களே! நாம் இப்பொழுது கூட்டுக்குடும்பம் – தனிக்குடும்பம் பற்றி விவாதிக்கலாமா?
**மாணவர்கள்** : சரிங்க ஐயா.
**ஆசிரியர்** : நம் நாட்டைப் பொருத்தவரை அனைவரும் கூட்டுக் குடும்பமாக வாழ்வதுதான் சிறந்தது.
**செல்வம்** : கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தால் சுதந்திரமாக வாழ முடியாது. தனிகுடும்பம்தான் சிறந்தது.
**அய்யனார்** : கூட்டுக் குடும்பமாக வாழும்போது ஒவ்வொருவரும் ஒழுக்கத்துடன் இருப்பார்கள்.
**செல்வம்** : தனிக்குடும்பத்தில்தான் ஒழுக்கம் அதிகமாக இருக்கும். வேலை முடிந்தவுடன் வீடு, பிள்ளை என இருப்பார்கள்.
**அய்யனார்** : தனியாக வாழ்ந்தால் மனிதனுக்கு மதிப்பு இருக்காது.
**பாண்டியன்** : கூட்டுக் குடும்பத்தில் வாழ்ந்தால் மனிதர்களுக்குள் மதிப்பு மரியாதை இருக்கும்.
**செல்வம்** : தனிக் குடும்பத்தில் வாழும்போது சுயநலமாக வாழ்வார்கள். கூட்டுக் குடும்பத்தில் ஒற்றுமையாக இருப்பார்கள். உறவுகள் மேம்படும்.
**பாண்டியன்** : தனிக் குடும்பத்தில் சுயநலத்துடன் வாழ்வார்கள். கூட்டுக் குடும்பத்தில் வாழ்பவர்கள் பொது நலத்துடன் இருப்பார்கள்.
**ஆசிரியர்** : ஒரு மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை கூட்டுக் குடும்பத்தில் வாழ்ந்தால் மட்டுமே நிம்மதியான வாழ்க்கையை வாழ முடியும். எனவே கூட்டுக் குடும்பமே சிறந்தது. மாணவர்களே! நீங்க நன்றாக விவாதம் செய்தீர்கள் மிக்க மகிழ்ச்சி.
**மாணவர்கள்** : நன்றி ஐயா!

2. **குடும்ப உறுப்பினர்களின் உறவுமுறைப் பெயர்களை அட்டவணைப்படுத்தி எழுதுக.**

**வளவன் :**

| | | | |
|---|---|---|---|
| மதிவாணன் | – தாத்தா | கலையரசி | – பாட்டி |
| கமலகண்ணன் | – அப்பா | சாந்தி | – அம்மா |
| செல்வம் | – அண்ணன் | விஜயன் | – தம்பி |
| தமிழ்ச்செல்வி | – அக்கா | கலா | – தங்கை |
| குமரன் | – சித்தப்பா | செல்வி | – சித்தி |
| சித்தார்த் | – தம்பி | ஜெயா | – தங்கை |



orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### பலவுள் தெரிக.

**1. மனித சமூகத்தின் அடிப்படை அலகு** பிடிஏ–2, 6

அ) திருமணம் ஆ) குடும்பம் இ) தாய்மனை ஈ) மணந்தகம் **விடை: ஆ) குடும்பம்**

**2. சங்க காலத்தில் கண சமூகத்துக்குத் தலைமை ஏற்றவர் :** செப். 2020

அ) தாயே ஆ) தந்தையே இ) தலைவியே ஈ) தலைவனே **விடை: அ) தாயே**

### குறுவினா

**1. இல்வாழ்வின் பயன் யாது?** பிடிஏ–3

இல்லற வாழ்வின் இறுதி காலத்தில் பெருமைகள் நிறைந்த மக்களுடன் நிறைந்து, அறத்தினை விரும்பிய சுற்றத்தோடு சேர்ந்து, தலைவனும் தலைவியும் மனையறம் காத்தலே இல்வாழ்வின் பயனாகும்.

**2. சங்க காலத்தில் தாய்வழிச் சமூகமுறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?** ஆக. 2021

தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்து, வளங்கள் மற்றும் செல்வங்கள் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன என்பதை குறுந்தொகையிலுள்ள மருதத்திணைப் பாடல் விளக்குகிறது.

### பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்துத் தொடரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

சங்க இலக்கியத்தில் இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம் முதலிய சொற்கள் குடும்பங்களின் வாழ்விடங்களில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டுகின்றன. மருதத்திணைப் பாடல் ஒன்றில் மகளிர் 'தம்மனை', 'நும்மனை' என மனைவியின் இல்லத்தையும் கணவனின் இல்லத்தையும் பிரித்துப் பேசும் போக்கினைக் காணமுடிகிறது. இன்னும் சில இடங்களில் தற்காலிகத் தங்குமிடம் 'புக்கில்' எனவும் திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து, தனியாக வாழுமிடம் 'தன்மனை' எனவும் வழங்கப் பெற்றுள்ளன.

**வினாக்கள் :** பிடிஏ–5

1. **வேறுபட்ட வாழ்விடங்களைக் குறிக்கும் சொற்களைப் பத்தியிலிருந்து எடுத்தெழுதுக.**
   இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம் முதலிய சொற்கள்
2. **தம்மனை, நும்மனை என்பன எவற்றைக் குறிக்கின்றன?**
   மருதத்திணைப் பாடல் ஒன்றில் மகளிர் 'தம்மனை', 'நும்மனை' என மனைவியின் இல்லத்தையும் கணவனின் இல்லத்தையும் பிரித்துப் பேசும் போக்கினைக் காணமுடிகிறது.
3. **புக்கில் - பொருள் தருக.**
   புக்கில் – தற்காலிகத் தங்குமிடம்.
4. **தன்மனை என்பதன் பொருள் யாது?**
   தன்மனை – தனியாக வாழுமிடம்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக.

**1. கூற்று 1 : குடும்பம் எனும் சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் பயின்று வந்துள்ளது.**
**கூற்று 2 : நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல குடும்பமும், திருமணமும் ஒன்றையொன்று சார்ந்தே செயல்படுகின்றன.**

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1ம் 2ம் சரி
இ) கூற்று 1ம் 2ம் தவறு ஈ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி **விடை: ஆ) கூற்று 1ம் 2ம் சரி**

**2. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

| | | | |
|---|---|---|---|
| 1. | குடும்பு | – அ) | புலப்பில் |
| 2. | வாழ்விடப்பெயர் | – ஆ) | புக்கில் |
| 3. | தற்காலிகத் தங்குமிடம் | – இ) | கூடி வாழுதல் |
| 4. | தனியாக வாழுமிடம் | – ஈ) | தன் மனை |

(i) இ, அ, ஆ, ஈ (ii) ஈ, இ, ஆ, அ
(iii) ஆ, ஈ, இ, அ (iv) இ, அ, ஈ, ஆ **விடை: (i) இ, அ, ஆ, ஈ**

கற்றத்தார் கண்ணே உள



orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

3. பொருத்தமற்ற இணையைக் கண்டறி.
அ) மனைவியின் இல்லம் – தம்மனை ஆ) கணவனின் இல்லம் – நும்மனை
இ) தற்காலிகத் தங்குமிடம் – தன் மனை ஈ) வாழ்விடப் பெயர் – புலப்பில்
விடை: இ) தற்காலிகத் தங்குமிடம் – தன் மனை

4. கூற்று 1 : குடும்பு எனும் சொல் கூடி வாழுதல் என்று பொருள்படும்.
கூற்று 2 : பண்டைத் தமிழர்கள் குடும்பம் எனும் அமைப்புடன் வாழ்ந்த இடங்களைத் தொல்காப்பிய நூற்பா இல், மனை எனக் குறிப்பிடுகின்றது.
அ) கூற்று 1ம் 2ம் தவறு ஆ) கூற்று 2 தவறு கூற்று 1 சரி
இ) கூற்று 1ம் 2ம் சரி ஈ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு விடை: இ) கூற்று 1ம் 2ம் சரி

5. தமிழர் குடும்பமுறை எனும் கட்டுரைப் பகுதியை எழுதியவர்
அ) பக்தவத்சல பாரதி ஆ) பண்டிதமணி மு.கதிரேச செட்டியார்
இ) பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் ஈ) க.நா.சுப்பிரமணியன் விடை: அ) பக்தவத்சல பாரதி

6. தமிழர் குடும்பமுறை கட்டுரைச் சுருக்கம் ................ வெளிவந்தது.
அ) பனுவல் காலாண்டு இதழில் ஆ) பாலபாரதம் அரையாண்டு இதழில்
இ) கிழக்கு வாசல் உதயம் என்ற இதழில் ஈ) ஜகன் மோகினி என்ற இதழில்
விடை: அ) பனுவல் காலாண்டு இதழில்

இயல் 3

7. கீழ்க்கண்டவற்றுள் பக்தவத்சல பாரதி இயற்றாத நூல்
அ) பாணர் இனவரைவியல் ஆ) தமிழர் உணவு
இ) தமிழர் மானிடவியல் ஈ) நுண்கலைகள் விடை: ஈ) நுண்கலைகள்

8. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.
அ) குடும்ப அமைப்போடு தொடர்புடைய சொல் – 1. கடும்பு
ஆ) பக்தவத்சல பாரதி இயற்றிய நூல் – 2. தமிழகப் பழங்குடிகள்
இ) கணவனின் இல்லம் – 3. தும்மனை
ஈ) வாழிட வேறுபெயர் – 4. குரம்பை
விடை: இ) கணவனின் இல்லம் – 3. தும்மனை

9. தம்மனை, நும்மனையை எடுத்துக்கூறும் சங்க இலக்கிய நூல்
அ) பதிற்றுப்பத்து ஆ) அகநானூறு
இ) புறநானூறு ஈ) கலித்தொகை விடை: ஆ) அகநானூறு

10. தற்காலிகத் தங்குமிடத்தைப் புக்கில் என அழைத்த நூல்
அ) குறுந்தொகை ஆ) நற்றிணை
இ) ஐங்குறுநூறு ஈ) புறநானூறு விடை: ஈ) புறநானூறு

11. புரிந்து பொருத்துக.

| | தாய்வழிக்குடும்பம் / இவளது மகன் | | சான்று நூல்கள் |
|---|---|---|---|
| அ) | சிறுவர் தாயே பேரிற்பெண்டே | 1. | பதிற்றுப்பத்து |
| ஆ) | என் மகள் ஒருத்தியும் பிறள் மகன் ஒருவனும் | 2. | புறநானூறு -270 |
| இ) | சேரநாட்டு மருமக்கள் தாயமுறை | 3. | புறநானூறு -278 |
| ஈ) | முளரிமருங்கின் முதியோள் சிறுவன் | 4. | கலித்தொகை |

அ) 2, 4, 3, 1 ஆ) 2, 1, 3, 4 இ) 4, 3, 2, 1 ஈ) 2, 4, 1, 3 விடை: ஈ) 2, 4, 1, 3

12. செம்முது பெண்டின் காதலஞ்சிறா அன் என்ற வரிகள் (தாய்வழிக் குடும்பம் குறித்து) இடம்பெற்ற நூல்
அ) புறநானூறு ஆ) கலித்தொகை இ) அகநானூறு ஈ) பதிற்றுப்பத்து விடை: அ) புறநானூறு


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

13. பொருத்தமற்ற தொடரை கண்டறி.

| | | |
|---|---|---|
| அ) | கணவனின் இல்லம் | – நும்மனை |
| ஆ) | பெண் திருமணம் செய்த பின்னரும் தன் இல்லத்திலேயே வாழ்க்கை நடத்தும் முறை | – தாயமுறை |
| இ) | மணம்புரிந்த கணவனும், மனைவியும் இல்லற வாழ்வில் ஈடுபடுவது | – மணந்தகம் |
| ஈ) | மனைவியின் இல்லம் | – புக்கில் |

**விடை: ஈ) மனைவியின் இல்லம் – புக்கில்**

14. தாய்வழிச்சொத்துகள் பெண்டிருக்கே போய்ச் சேர்ந்தன என்பதைக் குறிப்பிடும் நூல் .......... .
அ) ஐங்குறுநூறு ஆ) குறுந்தொகை இ) புறநானூறு ஈ) அகநானூறு
**விடை: ஆ) குறுந்தொகை**

15. சிலம்பு கழி நோன்பு குறித்து கூறும் சங்க இலக்கிய நூல்
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) ஐங்குறுநூறு ஈ) குறுந்தொகை
**விடை: இ) ஐங்குறுநூறு**

16. "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" என்று குறிப்பிட்ட நூல் .......... .
அ) நற்றிணை ஆ) அகநானூறு இ) குறுந்தொகை ஈ) கலித்தொகை
**விடை: இ) குறுந்தொகை**

17. தனிக்குடும்பம் பற்றி கூறும் சங்க கால நூல்
அ) புறநானூறு ஆ) ஐங்குறுநூறு இ) தொல்காப்பியம் ஈ) பதிற்றுப்பத்து
**விடை: ஆ) ஐங்குறுநூறு**

18. பொருத்தம் இல்லா தொடரைக் கண்டறி.
அ) நும்மனைச் சிலம்பு ... – ஐங்குறுநூறு ஆ) மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே – குறுந்தொகை
இ) மறியிடைப்படுத்த மான்பிணை போல் – புறநானூறு
ஈ) முளரிமருங்கின் முதியோள் சிறுவன் – புறநானூறு 278
**விடை: இ) மறியிடைப்படுத்த மான்பிணை போல் – புறநானூறு**

19. கூற்று 1 : 'மனை' எனும் சொல் சங்க இலக்கியங்களில் 'நம்மனை', நுந்தைமனை, கடிமனை, 'தாய்மனை' என்பனவாக பயின்று வந்துள்ளன.
கூற்று 2 : நேர்வழி விரிந்த குடும்ப முறையை ஒக்கூர் மாசாத்தியார் புறநானூறு பாடல் மூலம் விளக்கியுள்ளார்.
அ) கூற்று 1ம் 2ம் தவறு ஆ) கூற்று 1 சரி 2 தவறு
இ) கூற்று 1ம் 2ம் சரி ஈ) கூற்று 2 சரி 1 தவறு **விடை: இ) கூற்று 1ம் 2ம் சரி**

20. விரிந்த குடும்பம் பற்றி பதிவு செய்யும் இலக்கண நூல்
அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம்
இ) தண்டியலங்காரம் ஈ) யாப்பருங்கலக்காரிகை **விடை: ஆ) தொல்காப்பியம்**

21. நற்றாய்
அ) பெற்றதாய் ஆ) வளர்ப்பு தாய் இ) தோழி ஈ) செவிலி தாய்
**விடை: அ) பெற்றதாய்**

22. சங்ககாலத்தில் ஆண் மையச் சமூக முறைக்கு எடுத்துக்காட்டு .......... .
அ) தாய்வழிக் குடும்பம் ஆ) தந்தை வழிக் குடும்பம்
இ) தனிக் குடும்பம் ஈ) விரிந்த குடும்பம் **விடை: ஆ) தந்தை வழிக் குடும்பம்**

23. சங்க காலத்தில் இளந்தம்பதியருக்கு ஏற்ற அறிவுரை கூறுபவர் .......... .
அ) நற்றாய் ஆ) தோழி இ) தந்தை ஈ) செவிலித்தாய்
**விடை: ஈ) செவிலித்தாய்**

24. பல ஆதிக்குடிகளிடம் தனிக்குடும்பமுறை முக்கியமாக இருந்ததை சுட்டிக்காட்டும் ஆய்வுகள் எவை?
அ) செப்பேடு ஆய்வுகள் ஆ) கல்வெட்டு ஆய்வுகள்
இ) இன வரைவியல் ஆய்வுகள் ஈ) அகழாய்வுகள் **விடை: இ) இன வரைவியல் ஆய்வுகள்**





orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

குறுவினா

1. **மனித சமூகம் எவ்வாறு கட்டமைக்கப்படுகிறது?**
குடும்பம் எனும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் எனும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது.

2. **சங்க இலக்கியங்களில் குடும்ப அமைப்போடு தொடர்புபடுத்தப்பட்ட சொற்கள் எவை?**
சங்க இலக்கியங்களில் குடும்ப அமைப்போடு தொடர்புபடுத்தப்பட்ட சொற்கள்
குடம்பை, குடும்பு, கடும்பு ஆகியனவாகும்.

3. **வாழ்விடங்களின் வேறுபெயர்களாய் சங்க இலக்கியங்கள் கூறும் சொற்கள் யாவை?**
**வாழ்விடங்களின் வேறு பெயர்களாய் சங்க இலக்கியங்கள் கூறும் சொற்கள் :**
இல், குடில், மனை, கூரை, குரம்பை, வரைப்பு, புலப்பில், முற்றம், முன்றில், நகர், மாடம் முதலியனவாகும்.

4. **மணந்தகம் என்றால் என்ன?**
மணம்புரிந்த கணவனும், மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டமே மணந்தகம் எனப்படுகிறது. முதல் குழந்தை பிறக்கும்வரை உள்ள காலகட்டத்தை இந்நிலை குறிக்கிறது.

5. **'மனை' எனும் சொல் சங்க இலக்கியங்களில் எவ்வாறெல்லாம் பயின்று வந்துள்ளது?**
'மனை' எனும் சொல் 'நம்மனை', 'தம்மனை', 'எம்மனை', 'இம்மனை', 'உம்மனை', 'நின்மனை', 'நுந்தைமனை', 'நன்மனை', 'வறுமனை', 'வளமனை', 'கடிமனை', 'தாய்மனை' என சங்க இலக்கியங்களில் பல இடங்களில் பயின்று வந்துள்ளது.

6. **தாயமுறை என்றால் என்ன?**
பெண் திருமணம் செய்த பின்னரும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் முறையை தாயமுறை என்பர்.

7. **தொடக்கநிலை (அ) எளிய (அ) நெருக்கமான குடும்பம் என்றால் என்ன?**
தாய், தந்தை, குழந்தை மூவருமுள்ள தனிக்குடும்பம் மிகவும் நெருக்கமானது என்பதால் இது தொடக்கநிலை (அ) எளிய (அ) நெருக்கமான குடும்பம் என்று அழைக்கப்படும்.

8. **சிலம்புகழி நோன்பு என்றால் என்ன? சான்று தருக.**
திருமணமான பின் தலைவன் தலைவியை அவனுடைய இல்லத்திற்கு அழைத்து வந்தபோது அவனுடைய தாய் அவளுக்குச் செய்யும் முறையே சிலம்புகழி நோன்பு எனப்படும். **சான்று :** ஐங்குறுநூறு, பாடல் – 399.

9. **விரிந்த குடும்பம் என்றால் என்ன?**
தனிக்குடும்ப அமைப்பு விரிவு பெற்று கணவன், மனைவி ஆகியோருடன் பெற்றோர் ஒருவரின் தந்தையும் உடன் வாழ்வதை விரிந்த குடும்பம் என்பர்.

10. **நேர்வழி விரிந்த குடும்பம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.**
(i) தனிக்குடும்ப அமைப்பில் கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தையும் சேர்ந்து வாழ்வதை விரிந்த குடும்பம் என்பர்.
(ii) **சான்று :** ஒக்கூர் மாசாத்தியாரின் புறநானூற்றுப்பாடல் -279

11. **'தமிழர் குடும்ப முறை' பற்றி எந்நூலில் கட்டுரையாக வெளிவந்தது? அக்கட்டுரையை எழுதியவர் யார்?**
தமிழர் குடும்ப முறையைப் பற்றி பனுவல் (தொகுதி II – 2010) காலாண்டிதழில் கட்டுரை வெளிவந்தது.
அக்கட்டுரையை எழுதியவர் பக்தவத்சல பாரதி ஆவார்.

12. **தமிழர் பரம்பரை குடும்பத்தில் இடம்பெற்றிருந்த பெயர்களை எழுதுக.**
**தமிழர் பரம்பரை பெயர்கள்:**
பரன் – பரை, சேயோன் – சேயோள், ஓட்டன் – ஓட்டி, பூட்டன் – பூட்டி, பாட்டன் – பாட்டி, தந்தை – தாய், நாம், மகன் – மகள், பெயரன் – பெயர்த்தி, கொள்ளுப் பெயரன் – கொள்ளுப் பெயர்த்தி, எள்ளுப் பெயரன் – எள்ளுப் பெயர்த்தி.

இயல் 3

**சிறுவினா**

**1. பக்தவத்சல பாரதி இயற்றிய நூல்கள் யாவை?**

**பக்தவத்சல பாரதி இயற்றிய நூல்கள் :**

(i) இலக்கிய மானிடவியல் (ii) பண்பாட்டு மானிடவியல்
(iii) தமிழர் மானிடவியல் (iv) தமிழகப் பழங்குடிகள்
(v) பாணர் இனவரைவியல் (vi) தமிழர் உணவு போன்றனவாகும்.

**2. சங்க இலக்கிய நூல்களின் துணைக்கொண்டு தாய்வழிக்குடும்பம் பற்றி எழுதுக.**

சங்க காலத்தில் கண சமூகத்துக்குத் தாயே தலைமை ஏற்றிருந்தாள். தாய்வழியாகவே குலத்தொடர்ச்சி குறிக்கப்பட்டது. பதிற்றுப்பத்து கூறும் சேரநாட்டு மருமக்கள் தாய முறை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

(i) சிறுவர்தாயே பேரிற் பெண்டே (புறம் -270)
(ii) செம்முது பெண்டின் காதலஞ்சிறா அன் (புறம் -276)
(iii) வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன் (புறம் -277)
(iv) முளரி மருங்கின் முதியோள் சிறுவன் (புறம் -278)
(v) என் மகள் ஒருத்தியும் பிறள் மகன் ஒருவனும் (கலி - பாலை 8) - முதலான தொடர்களில் இவளது மகன் என்றே கூறப்பட்டுள்ளது.

சங்க காலத்தில் பெண் திருமணம் செய்த பின்னரும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாய முறை இருந்துள்ளது. தாய்வழிக்குடும்பங்களில் பெண்களே குலத்தொடர்ச்சிக்கு உரியவர்களாக கருதப்பட்டனர். தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன என குறுந்தொகையில் உள்ள மருதத்திணைப் பாடல் ஒன்று கூறுகிறது.

**3. சங்ககால குடும்ப அமைப்பில் செவிலித்தாயின் பங்கு குறித்து எழுதுக.**

(i) சங்ககால குடும்ப அமைப்பில் நற்றாய் இருந்தாலும் செவிலித்தாயும் அவளது மகளான நற்றாய் மகளின் தோழியும் முதன்மையாக இருந்துள்ளனர்.
(ii) செவிலித்தாய் சமூகத் தாயாகவும் விளங்கினாள்.
(iii) சங்க காலத்தில் ஒவ்வோர் ஆயத்துக்கும் செவிலித்தாயே பொறுப்பேற்றிருந்தாள்.
(iv) திருமணம் முடிந்த பின் இளந்தம்பதியினருக்கு ஏற்ற அறிவுரை கூறி நெறிப்படுத்தும் பணி செவிலிக்கு உரியது எனத் தொல்காப்பியம் கூறுகிறது.

**4. சங்ககாலத்தில் தாய்வழிக் குடும்பத்தின் நடைமுறைகள் குறித்து விளக்குக.**

(i) சங்க காலத்தில் கண சமூகத்துக்குத் தாயே தலைமை ஏற்றிருந்தாள்.
(ii) பெண் திருமணம் செய்த பின்னரும் தாயின் இல்லத்திலேயே கணவனுடன் வாழ்ந்து வந்தாள்.
(iii) தாய்வழிக் குடும்பங்களில் பெண்கள் குலத்தொடர்ச்சிக்கு உரியவர்களாக இருப்பதால் பெண் குழந்தைகளின் பேறு முதன்மையாக விரும்பப்பட்டது.
(iv) தாய் வழிமுறையில் குடும்பத்தின் சொத்து, வளங்கள் மற்றும் செல்வங்கள் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டன.

**5. சங்ககாலத்தில் தந்தை வழிக்குடும்பத்தின் நடைமுறைகள் குறித்து எழுதுக.**

(i) பெண், திருமணத்திற்குப் பின்னர் கணவனுடைய தந்தையகத்தில் வாழ்ந்தாள்.
(ii) பெண் தன் கணவனையே முழுவதும் சார்ந்திருந்தாள்.
(iii) தந்தைவழிக் குடும்பமுறையை விளக்கும் சமூகக் களங்களாக பொருள்வயிற் பிரிவு, போர், வாழ்வியல் சடங்குகள், குடும்பம், திருமணம் போன்றவை இருந்தன.

☆ ☆ ☆

கற்றத்தார் கண்டேனா உள


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

www.kalvinesan.com https://t.me/kalvinesan
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

செல்வத்துள் எல்லாம் தலை - கல்வி

# இயல் 4 பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள்

- உ.வே.சாமிநாதர் உரைநடை உலகம்

**கரு**

✳ பழங்காலத்தில் உபாத்தியாயர் வீடே பள்ளிக்கூடமாக இருந்தது. அதை குருகுலம் என்றார்கள். உபாத்தியாயர் என்பவர் கணக்காயர். கணக்கு என்பது நூலின் பெயர்.

✳ 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய திண்ணைப் பள்ளிகளில் கற்பித்தல் முறைகள் மற்றும் வித்தியாரம்பம், மையாடல், கையெழுத்து, எழுத்தின் வடிவம், மனனப்பயிற்சி நூல்கள், சுவடிகள், எழுத்தாணிகள், ஓதற்பிரிவு, வாது புரிதல் போன்றவை குறித்து விளக்குகிறது இவ்வுரை நடைப்பகுதி.



**ஆசிரியர் குறிப்பு**



| | |
|---|---|
| பெயர் | : உ.வே. சாமிநாதர் |
| இயற் பெயர் | : வேங்கடரத்தினம் |
| பிறந்த ஊர் | : திருவாரூரிலுள்ள உத்தமதானபுரம் |
| காலம் | : 19.02.1855 முதல் 28.04.1942 வரை |
| இவருடைய ஆசிரியர் | : மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை |
| ஆசிரியர் இவருக்கு வைத்த பெயர் | : சாமிநாதன் |

**உத்தமதானபுரம் வேங்கட சுப்புவின் மகனார் சாமிநாதன் என்பதன் சுருக்கமே உ.வே.சா. என்பதாகும்.**

| | |
|---|---|
| சிறப்புப் பெயர்கள் | : தமிழ்த்தாத்தா (கல்கி வழங்கியது), மகாமகோபாத்தியாய (ஆங்கிலேய அரசு வழங்கியது), திராவிட வித்தியா பூஷணம், தாக்ஷிணாத்திய கலாநிதி. |
| பணி | : கும்பகோணம் அரசு கலைக் கல்லூரியிலும், சென்னை மாநிலக் கல்லூரியிலும் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். |
| பட்டம் | : 1932-இல் சென்னைப் பல்கலைக்கழகம் 'டாக்டர்' பட்டம் வழங்கியது. |
| சிறப்புகள் | : புலமைப் பெருங்கடல், சிறந்த எழுத்தாளர், பதிப்பாசிரியர், பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடித்தேடி அச்சில் பதிப்பிக்க பெரும்பாடுபட்டவர். |
| தமிழக அரசு செய்த சிறப்புகள் | : சென்னை மாநிலக்கல்லூரியில் வங்கக்கடலை நோக்கிய வண்ணம் நிற்கும் நிலையில் இவரது திருவுருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது. உத்தமதானபுரத்தில் உ.வே.சா. நினைவு இல்லம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னையில் திருவான்மியூரில் இவரது பெயரால் உ.வே.சா. நூலகம் அமைந்துள்ளது. |
| நடுவணரசு செய்த சிறப்பு | : 2006-இல் இவர் உருவம் பொறித்த அஞ்சல்தலையை வெளியிட்டு இவரின் தமிழ்த்தொண்டினை பெருமைப்படுத்தியுள்ளது. |

**பாடப்பகுதி**

சுதேசமித்திரன் வார இதழில் வெளியான உ.வே.சா. அவர்களின் கட்டுரை பாடப்பகுதியாக அமைந்துள்ளது. இக்கட்டுரை **உயிர்மீட்சி** என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்ட உ.வே.சா. அவர்களின் இலக்கிய கட்டுரையில் இடம் பெற்றுள்ளது.

## கற்பவை கற்றபின்

1. **பண்டைக்காலப் பள்ளிக்கூடங்களில் பின்பற்றப்பட்ட குறிப்பிடத்தக்க நடைமுறைகளில், தற்காலத்தில் கொள்ளத்தக்கவை குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

மாணவர்கள் : வணக்கம் ஐயா.

ஆசிரியர் : வணக்கம் மாணவர்களே! பண்டைக்காலப் பள்ளிக்கூடங்களில் பின்பற்றப்பட்ட குறிப்பிடத்தக்க நடைமுறைகளில், மையாடல், மனனப் பயிற்சி, ஏடெழுதும் வழக்கம் போன்றவைகளாகும். இவற்றில் நமக்கு தற்காலத்திலும் மேற்கொள்ளத்தக்கவை குறித்து கலந்துரையாடுவோமா?



orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

**மாணவர்கள்** : சரிங்க ஐயா.

**சந்தியா** : "மையாடல்" பின்பற்றப்பட வேண்டும். ஏனென்றால் எழுத்துகளை விளக்கமாகக் காட்டுவதோடு கண்ணுக்கும் குளிர்ச்சியைத் தரும்.

**அரி** : ஆமாம், பின்பற்ற வேண்டும்.

**தியா** : அதேபோல் மனனப் பயிற்சியை என்றென்றும் பின்பற்ற வேண்டும். மனனப் பயிற்சி இல்லையேல் கல்வியே இல்லை.

**அரி** : ஆமாம். அனைவருக்கும் தேவையானதுதான். மனனப் பயிற்சி செய்தால்தான் தேர்வுகளில் அதிக மதிப்பெண் எடுக்க முடியும்.

**சந்தியா** : பழங்காலத்தில் கல்வி கற்கும்போது ஓலைச் சுவடிகளில் எழுதுவார்கள். அவற்றையே இன்று ஓலைச்சுவடிக்குப் பதிலாக காகிதங்களில் எழுதுகிறோம்.

**தியா** : ஆமாம். இதுதான் ஏடெழுதும் வழக்கம் என்று கூறப்படுகிறது.

**சந்தியா** : நமக்குத் தேவையான விஷயங்களையோ, நல்லக் கருத்துகளையோ, ஏடுகளில் எழுதி வைக்கும் பழக்கம் பண்டைய காலம் முதல் தற்காலம் வரை உள்ளது.

**அரி** : இவற்றை எக்காலத்திலும் எல்லோரும் பின்பற்றுவார்கள்.

**சந்தியா** : பண்டைய காலத்தில் பின்பற்றியவைகளை இன்றும் பின்பற்றிக் கொண்டுதான் இருக்கிறோம்.

**ஆசிரியர்** : நல்ல கருத்துகளை நன்றாக கூறினீர்கள். மிக்க மகிழ்ச்சி.

**2. 'மனனம் செய்தல்' – இன்றைய கல்விநிலையிலும் குறிப்பிடத்தக்க ஒரு கூறு. இது பற்றிப் பத்துக் கருத்துகளை முன்வைக்க.**

(i) மனனம் செய்தல் தேர்வுக்கு எளிதாக இருக்கும்.
(ii) எழுத்துப் பிழைகளும் வார்த்தைப் பிழைகளும் வாரா.
(iii) அனைத்துக் கேள்விகளுக்கான பதில்களையும் எழுத முடியும்.
(iv) மனனம் செய்வதால் எந்த நேரத்திலும் தங்குதடையின்றி எளிதாக விடை கூற முடியும்.
(v) மனனம் செய்வதன் மூலம் கவனச் சிதறல் உண்டாகாது.
(vi) மனனம் செய்தால் நீண்ட காலம் கற்ற கல்வி நினைவில் நிற்கும்.
(vii) மனனம் செய்வதை எங்கும் செய்யலாம். பள்ளியில்தான் மனனம் செய்ய வேண்டுமென்ற கட்டாயமில்லை.
(viii) படங்களை வரைந்துப் பார்த்தால் மனதில் எளிதாகப் பதியும்.
(ix) கற்றதை மற்றவர்களுடன் கலந்துரையாடுதலால் சந்தேகங்களுக்குத் தெளிவு பெற முடியும்.
(x) கற்றதை மற்றவர்களுக்கு கற்றுக் கொடுக்க மனனம் செய்தல் அவசியம்.

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### பலவுள் தெரிக.

**1. எழுத்தாணிகள் எத்தனை வகைப்படும்?** பிடிஏ–1

அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5 **விடை: ஆ) 3**

### குறுவினா

**1. மையாடல் விழா என்றால் என்ன?** அ.மா.வி 2019

வசம்பு, மஞ்சள், மணத்தக்காளி இலைச் சாறு, மாவிலைக்கரி, தர்ப்பைக்கரி முதலியவற்றை சேர்த்து செய்த மையை சுவடியில் தடவி வாசிக்கச் செய்வார்கள். இதனால் அக்ஷராப்பியாசத்தை 'மையாடல் விழா' என்று கூறுவார்கள்.

### சிறுவினா

**1. வித்தியாரம்பம் பற்றி சிறுகுறிப்பு வரைக. (அ) வித்தியாரம்பம் என்பது யாது?** பிடிஏ–1, 2

வித்தியாரம்பம் என்றால் 'கல்வியின் தொடக்கம்' என்பது பொருளாகும். முதன்முதலில் ஐந்தாம் வயதில் வித்தியாப்பியாசம் செய்யும் போது பெற்றோர், பிள்ளைகளை ஆசிரியர்களிடம் அடைக்கலமாக கொடுத்து வந்தார்கள். பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் காலம் ஒரு விசேட நாளாகக் கொண்டாடப்பட்டது. ஏட்டின் மீது மஞ்சள் பூசிப் பூசித்து பையனிடம் கொடுத்து வாசிக்கச் சொல்வார்கள்.

செல்வத்துள் எல்லாம் தலை


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

**2.** **எழுத்தாணிகள் குறித்து உ.வே.சா. கூறுவனவற்றை எழுதுக.** செப். 2020

**எழுத்தாணிகள் குறித்து உ.வே.சா. கூறுவன:**

எழுத்தாணியை ஊசி என்றும் அழைப்பார்கள். மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி என்பன எழுத்தாணியின் வகைகள்.

(i) மடக்கெழுத்தாணி : இதில் ஒரு பக்கத்தில் இரண்டு கத்திகளும், மற்றொரு பக்கத்தில் இரண்டு எழுத்தாணிகளும் உள்ள வகையாகும்.

(ii) வாரெழுத்தாணி : இது, வாருவதற்காக ஒரு பக்கம் கத்தியும், எழுதுவதற்காக மறுபக்கம் எழுத்தாணியும் உள்ள வகையாகும்.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

**1.** **சென்னை புரசைவாக்கம் சர்.எம்.சி.டி முத்தையா உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் முதற்சொற்பொழிவு நடைபெற்ற நாள் ..................**

அ) 20-7-1936 ஆ) 19-7-1936
இ) 16-3-1936 ஈ) 12-2-1936

**விடை: அ) 20-7-1936**

**2.** **பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் என்ற சொற்பொழிவு சுதேசமித்திரன் வாரஇதழில் வெளிவந்த நாள் ..............**

அ) 16-7-1936 ஆ) 20-08-1936
இ) 16-08-1936 ஈ) 12-04-1936

**விடை: இ) 16-08-1936**

**3.** **பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் என்ற உ.வே.சா. அவர்களின் சொற்பொழிவு எந்த வார இதழில் வெளிவந்தது?**

அ) நடை ஆ) எழுத்து
இ) காவியம் ஈ) சுதேசமித்திரன்

**விடை: ஈ) சுதேசமித்திரன்**

**4.** **பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் என்ற உரைநூலை இயற்றியவர்**

அ) உ.வே.சாமிநாதர் ஆ) திரு.வி.க.
இ) மறைமலையடிகள் ஈ) புதுமைப்பித்தன்

**விடை: அ) உ.வே.சாமிநாதர்**

**5.** **பொருத்துக.**

அ) வெள்ளக்கால் ப.சுப்பிரமணியனார் - 1. எட்டயபுரம் திண்ணைப் பள்ளிக்கூடம்
ஆ) பின்னத்தூர் நாராயணசாமி - 2. குருசாமி வாத்தியார் திண்ணைப் பள்ளிக்கூடம்
இ) நாவலர் சோமசுந்தர பாரதியார் - 3. முத்துராம பாரதி திண்ணைப் பள்ளிக்கூடம்
ஈ) வேங்கடசாமி - 4. கணபதியார் திண்ணைப் பள்ளிக்கூடம்

அ) 2, 3, 1, 4 ஆ) 4, 2, 1, 3 இ) 4, 3, 1, 2 ஈ) 1, 4, 2, 3

**விடை: இ) 4, 3, 1, 2**

**6.** **மில்டனின் சுவர்க்க நீக்கத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர்**

அ) மா.இராசமாணிக்கனார் ஆ) பின்னத்தூர் நாராயணசாமி
இ) வெள்ளக்கால் ப.சுப்பிரமணியனார் ஈ) நாவலர் சோமசுந்தர பாரதியார்

**விடை: இ) வெள்ளக்கால் ப.சுப்பிரமணியனார்**

**7.** **நற்றிணை நூலின் உரையாசிரியர்**

அ) வேங்கடசாமி ஆ) பின்னத்தூர் நாராயணசாமி
இ) வ.சுப.மாணிக்கம் ஈ) வெள்ளக்கால் ப.சுப்பிரமணியனார்

**விடை: ஆ) பின்னத்தூர் நாராயணசாமி**

**8.** **மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த டாக்டர் வ.சுப. மாணிக்கம் படித்த திண்ணைப் பள்ளிக்கூடம்**

அ) கணபதியார் திண்ணைப் பள்ளிக்கூடம்
ஆ) கிருஷ்ணாபுரம் முத்துராம பாரதி திண்ணைப் பள்ளிக்கூடம்
இ) மகிபாலன் பட்டி நடேசனார் திண்ணைப் பள்ளிக்கூடம்
ஈ) எட்டயபுரம் திண்ணைப் பள்ளிக்கூடம்

**விடை: இ) மகிபாலன் பட்டி நடேசனார் திண்ணைப் பள்ளிக்கூடம்**

**9.** **மௌனகுருவிடம் படித்தவர் ..................**

அ) டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆ) ப.சுப்பிரமணியனார்
இ) பின்னத்தூர் நாராயணசாமி ஈ) நாவலர் சோமசுந்தர பாரதியார்

**விடை: அ) டாக்டர் மா. இராசமாணிக்கனார்**





orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

**10. கல்வியில் வாதம் செய்தலோடு நூற்பயிற்சியுடையவர்கள் அரசவைகளில் வாதம்புரிந்து தம் கல்வித் திறமையை வெளிப்படுத்துவர் எனக் கூறும் நூல் ..................**

அ) பட்டினப்பாலை ஆ) சிறுபாணாற்றுப்படை
இ) மதுரைக்காஞ்சி ஈ) நெடுநல்வாடை **விடை: இ) மதுரைக்காஞ்சி**

**11. "வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை கடனாக் கொளினே மடநனி இகக்கும்" என்னும் வரிகள் இடம்பெற்றுள்ள நூல்**

அ) தண்டியலங்காரம் ஆ) நன்னூல்
இ) கலித்தொகை ஈ) புறநானூறு **விடை: ஆ) நன்னூல்**

**12. பொருந்தாத இணையைக் கண்டறிக.**

| | | |
|---|---|---|
| அ) | உயிரின மருத்துவர் வெள்ளக்கால் ப.சுப்பிரமணியனார் | - கணபதியார் திண்ணைப் பள்ளிக்கூடம் |
| ஆ) | சிலப்பதிகார உரையாசிரியர் வேங்கடசாமி | - வல்லம் குருசாமி வாத்தியார் திண்ணைப் பள்ளிக்கூடம் |
| இ) | வழக்குரைஞரும், தமிழறிருமான நாவலர் சோமசுந்தர பாரதியார் | - கிருஷ்ணாபுரம் முத்துராம பாரதி திண்ணைப் பள்ளிக்கூடம் |
| ஈ) | மதுரைப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர் வ.சுப.மாணிக்கம் | - மகிபாலன்பட்டி நடேசனார் திண்ணைப் பள்ளிக்கூடம் |

**விடை: இ) வழக்குரைஞரும், தமிழறிருமான நாவலர் சோமசுந்தர பாரதியார் - கிருஷ்ணாபுரம் முத்துராம பாரதி திண்ணைப் பள்ளிக்கூடம்**

**13. சுவடிகளை வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கும் உபயோகப்படும் கருவிக்கு ............... என்று பெயர்.**

அ) தூக்கு ஆ) கிளிமூக்கு இ) சட்டம் ஈ) அம்பலம் **விடை: அ) தூக்கு**

**14. "ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்" என்பது**

அ) வளையாபதி ஆ) குண்டலகேசி இ) சிந்தாமணி ஈ) சிலப்பதிகாரம் **விடை: இ) சிந்தாமணி**

**15. தமிழ்த்தாத்தா என்று அழைக்கப்படுபவர்**

அ) திரு.வி.க. ஆ) மு.வ. இ) பொற்கோ ஈ) உ.வே.சா. **விடை: ஈ) உ.வே.சா.**

**16. பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் என்ற உரைநூல் கருத்துகள் .................. என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்ட உ.வே.சா. அவர்களின் இலக்கியக் கட்டுரைகளிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.**

அ) உயிர்மீட்சி ஆ) அம்பு இ) இளவரசி ஈ) திண்ணை **விடை: அ) உயிர்மீட்சி**

**17. பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடித்தேடி அச்சில் பதிப்பிக்க அரும்பாடுபட்டவர்**

அ) திரு.வி.க. ஆ) சுரதா இ) மௌனி ஈ) உ.வே.சா. **விடை: ஈ) உ.வே.சா.**

**18. மகாமகோபாத்தியாய, திராவிட வித்தியா பூஷணம், தாக்ஷிணாத்திய கலாநிதி உள்ளிட்ட பட்டங்களைப் பெற்றவர்**

அ) உ.வே.சாமிநாதர் ஆ) தேவநேயப் பாவாணர்
இ) தாயுமானவர் ஈ) கொத்தமங்கலம் சுப்பு **விடை: அ) உ.வே.சாமிநாதர்**

**19. பள்ளிக்கு முதலில் வருபவனை .................. என்று அழைப்பர்.**

அ) வேத்தான் ஆ) கணக்கன் இ) அண்ணாவி ஈ) குருசாமி **விடை: அ) வேத்தான்**

**20. சரியான தொடர்களைத் தேர்க.**

அ) பள்ளியெனும் சொல் ஜைன மடங்களுக்கும், பாடசாலைகளுக்கும் பொதுவான பெயராகும்.
ஆ) எழுத்தாணியை ஊசியென்றும் அழைப்பர்.
இ) தமிழ்த்தாத்தா உ.வே.சா. 1930இல் சென்னைப் பல்கலைக்கழகத்தினால் டாக்டர் பட்டம் பெற்ற பெருமைக்குரியவர்.
ஈ) தஞ்சாவூரில் இருந்த ஆகம சாஸ்திர பண்டிதராகிய சர்வசிவ பண்டிதரென்பவரிடத்தில் பல அன்னிய தேசத்து மாணாக்கர்கள் வந்து கற்று சென்றார்கள் என்ற செய்தியை முதல் பராந்தக சோழன் காலத்தில், மதுரையில் பொறிக்கப்பட்ட சாசனத்தால் அறியலாம்.

(i) அ, ஆ (ii) இ, ஈ (iii) ஆ, இ (iv) அ, ஈ **விடை: (i) அ, ஆ**




orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

| பாடல் | பொருளுரை |
|---|---|
| 3. **இத்தகைச் சீரும் சிறப்பும் கொண்ட நம**<br>**திந்திய தேசத்தில் அன்னியர்கள் - நடு**<br>**மத்தியில் வந்துகுடி புகுந்து வரு**<br>**மானங் கொடுத்து ரட்சித்து வரும்**<br>4. **கைத்தொழில் யாவையுங் கொஞ்சங் கொஞ்சமாகக்**<br>**காத்திருந்து சமயம் பார்த்து - உள்ள**<br>**அத்தனையுங் கொள்ளையிட்டுக் கொண்டுநம்மை**<br>**அற்பப் பிராணி போற் செய்ததினால்** | இத்தகைய பெருமையையும் சிறப்பையும் கொண்ட நமது பாரத நாட்டில், இடைக்காலத்தில் உள்ளே புகுந்த அயல்நாட்டவர், நமக்கு வருமானத்தைக் கொடுத்து காப்பாற்றி வந்த கைத்தொழில்கள் அனைத்தையும் சமயம் பார்த்து சிறிது சிறிதாகக் கொள்ளையடித்தனர். நம்மை விலங்கினும் கீழாக நடத்தினர். |

**சொல்லும் பொருளும் :**

இத்தகைச் சீரும் சிறப்பு கொண்ட - இத்தகைய பெருமையும் சிறப்பையும் கொண்ட
நமது இந்திய தேசத்தில் - நமது பாரத நாட்டில்
நடு மத்தியில் - இடைக்காலத்தில்
அன்னியர்கள் வந்து குடிபுகுந்து - அயல் நாட்டவர் வந்து குடிபுகுந்தனர்
வருமானம் கொடுத்து - நமக்கு வருமானத்தைக் கொடுத்து
ரட்சித்து வரும் - காப்பாற்றி வந்த
கைத் தொழில் யாவையும் - கைத்தொழில்கள் அனைத்தையும்
காத்திருந்து, சமயம் பார்த்து - சரியான காலத்தை எதிர்பார்த்திருந்து
கொஞ்சம் கொஞ்சமாக - சிறிது சிறிதாக
அத்தனையுங் கொள்ளையிட்டு - அனைத்தையும் கொள்ளையடித்து விட்டு
நம்மை அற்பப் பிராணி - நம்மை விலங்கினும் கீழாக
போற் செய்ததினால் - நடத்தியதால்

**இலக்கணக்குறிப்பு :**

| | |
|---|---|
| 1. சீறும் சிறப்பும் – எண்ணும்மை | 3. யாவையும் – முற்றும்மை |
| 2. புகுந்து, கொடுத்து, பார்த்து, வந்து – வினையெச்சங்கள் | |

**பகுபத உறுப்பிலக்கணம் :**

| வந்து – வா(வ) + த்(ந்) + த் + உ | கொடுத்து – கொடு + த் + த் + உ |
|---|---|
| வா – பகுதி 'வ' எனக் குறுகியது விகாரம் | கொடு – பகுதி |
| த் – சந்தி 'ந்' ஆனது விகாரம் | த் – சந்தி |
| த் – இறந்தகால இடைநிலை | த் – இறந்தகால இடைநிலை |
| உ – வினையெச்ச விகுதி | உ – வினையெச்ச விகுதி |
| **புகுந்து – புகு + த்(ந்) + த் + உ** | **பார்த்து – பார் + த் + த் + உ** |
| புகு – பகுதி | பார் – பகுதி |
| த் – சந்தி 'ந்' ஆனது விகாரம் | த் – சந்தி |
| த் – இறந்தகால இடைநிலை | த் – இறந்தகால இடைநிலை |
| உ – வினையெச்ச விகுதி | உ – வினையெச்ச விகுதி |

**புணர்ச்சி விதி :** **உடம்படுமெய் புணர்ச்சி**

**கொள்ளையிட்டு** – கொள்ளை + இட்டு

**விதிகள்:** கொள்ளை + இட்டு

(i) '**இ ஈ ஐ வழி யவ்வும்**' என்ற விதிப்படி இடையில் யகரம் தோன்றி **கொள்ளை + ய் + இட்டு** என்றானது.

(ii) '**உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து **கொள்ளையிட்டு** என்றானது.

| பாடல் | பொருளுரை |
|---|---|
| 5. **உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில்**<br>**உற்ற பலவித வேலை செய்து - நாம்**<br>**பெண்டு பிள்ளையுடன் கஷ்டப் பட்டுத்தினம்**<br>**பேயினும் நாயினும் கீழாகினம்** | நாம் பிறந்து, உண்டு வளர்ந்த நம் தாய் நாட்டில் பலவிதமான வேலைகளைச் செய்து பெருமையுடன் வாழ்ந்து வந்தோம். தற்போது மனைவி, குழந்தைகளுடன் தினமும் துன்பப்பட்டு பேயையும் நாயையும் விட கீழ்நிலைக்குச் சென்று விட்டோம். |

**சொல்லும் பொருளும் :**

உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் – நாம் பிறந்து, உண்டு வளர்ந்த நம் தாய் நாட்டில்
உற்ற பலவித வேலை செய்து – பலவிதமான வேலைகள் செய்து பெருமையுடன் வாழ்ந்து வந்த
நாம் பெண்டு பிள்ளையுடன் தினம் கஷ்டப்பட்டு – நாம் மனைவி குழந்தைகளுடன் தினமும் துன்பப்பட்டு
பேயினும் நாயினும் கீழாகினம் – பேயையும் நாயையும் விட கீழ் நிலைக்குச் சென்று விட்டோம்.

**இலக்கணக்குறிப்பு :**

1. உண்டு, பிறந்து, செய்து – வினையெச்சங்கள்
2. வளர்ந்த – பெயரெச்சம்
3. பெண்டு பிள்ளை – உம்மைத்தொகை
4. பேயினும் நாயினும் – எண்ணும்மை

**பகுபத உறுப்பிலக்கணம் :**

| | |
|---|---|
| **உண்டு – உண் + ட் + உ**<br>உண் – பகுதி<br>ட் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி | **பிறந்து – பிற + த்(ந்) + த் + உ**<br>பிற – பகுதி<br>த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி |
| **வளர்ந்த – வளர் + த்(ந்) + த் + அ**<br>வளர் – பகுதி<br>த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>அ – பெயரெச்ச விகுதி | **செய்து – செய் + த்+ உ**<br>செய் – பகுதி<br>த் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி |

**புணர்ச்சி விதி :** மகர ஈற்றுப்புணர்ச்சி

**இடந்தனில்** – இடம் + தனில்
**விதிகள்:** இடம் + தனில்
(i) '**மகர ஈறு கெடும்**' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றிலுள்ள மகரம் கெட்டு **இட + தனில்** என்றானது.
(ii) '**இனமிகல்**' விதிப்படி **இட + ந்+ தனில்** என்றாகி **இடந்தனில்** எனப் புணர்ந்தது.

| பாடல் | பொருளுரை |
|---|---|
| 6. **வேலைக்கு வாரீரோ என்று சொல்லிப்பல**<br>**வித்தார மாகவே நோட்டீ ஸொட்டி நம்மை**<br>**ஆலைக் கரும்புபோ லாட்டிக் குரங்காட்டும்**<br>**அந்த கங்காணிகள் கூப் பிடவே** | ஆங்கிலேயரிடம் முகவர்களாகச் செயல்பட்ட கங்காணிகள் வேலைக்கு வருமாறு நம்மை அழைப்பதற்கு பல விதமான ஆசை வார்த்தைகளை சுவரொட்டியில் எழுதி ஒட்டினர். ஆலையில் இட்ட கரும்பு, சக்கையாவது போல நம்மை துன்பப்படுத்துவதற்கு, குரங்காட்டிகள் போல் அவர்கள் செயல்பட்டனர். |

**சொல்லும் பொருளும் :**

வேலைக்கு வாரீரோ என்று சொல்லி – வேலைக்கு வருகிறீர்களா என்று கேட்டு
பல வித்தாரமாகவே நோட்டீஸ் ஒட்டி – பல ஆசை வார்த்தைகளை சுவரொட்டிகளில் எழுதி ஒட்டினார்கள்
நம்மை ஆலைக் கரும்பு போல் ஆட்டி – ஆலையில் இட்ட கரும்பு, சக்கையாவது போல் நம்மைத் துன்பப்படுத்துவதற்கு
குரங்காட்டும் அந்த – குரங்காட்டிகள் போல் செயல்படும்
கங்காணிகள் கூப்பிடவே – கங்காணிகள் கூப்பிட்டனர்

'கங்காணிகள்' என்பவர்கள் ஆங்கிலேயர்களுக்கு முகவர்களாக செயல்பட்டவர்கள்.

**இலக்கணக்குறிப்பு :** ஒட்டி – வினையெச்சம்

**பகுபத உறுப்பிலக்கணம் :** **ஒட்டி – ஒட்டு + இ**
ஒட்டு – பகுதி
இ – வினையெச்ச விகுதி

**புணர்ச்சி விதி :** மெய்யீற்றுப் புணர்ச்சி

**போலாட்டி** – போல் + ஆட்டி
**விதி:** போல் + ஆட்டி
'**உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து **போலாட்டி** என்றானது.

ஆறுமை உடைய செயல்


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

www.kalvinesan.com https://t.me/kalvinesan
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


| பாடல் | பொருளுரை |
|---|---|
| 7. ஒன்றுக்குப் பத்துநூறா யிரமாக வே<br>ஒவ்வொரு கூலி ஜனங்கள் மீதும் - மிகத்<br>தண்டு முண்டுமாய்க் கணக் கெழுதியவர்<br>சாகும் வரைக்குந் தலைச் சுமையாய் | கூலி வேலை செய்த மக்களின் வரவு செலவுக் குறிப்பேட்டில் அவர்கள் வாங்கிய சிறிய கடன் தொகைக்குப் பதிலாக பெருந்தொகையை பொய்க் கணக்காக எழுதினர். சாகும் வரை அக்கடன் தீராதபடி வட்டிக்கு மேல் வட்டியை எழுதி வைத்தனர். சிறிதுகூட இரக்கமில்லாமல் அவர்களை கப்பலிலே ஏற்றினர். |
| 8. பற்றுவரவு குறிப்புப் பேரேட்டி னிற்<br>பாக்கியிருக்கும் படி யெழுதி - அவர்<br>சற்றுந் தயவு மில்லாமலே கூலி<br>ஜனங்களைக் கப்ப லிலே யேற்றி. | |

**சொல்லும் பொருளும் :**

ஒன்றுக்குப் பத்து நூறாயிரமாகவே – சிறிய தொகை வாங்கியதற்கு பெருந்தொகை வாங்கியது போல
பற்று வரவு குறிப்புப் பேரேட்டினில் – வரவு செலவுக் குறிப்பேட்டில்
ஒவ்வொரு கூலி ஜனங்கள் மீதும் – ஒவ்வொரு கூலித் தொழிலாளி மீதும்
தண்டு முண்டுமாய் பாக்கியிருக்கும் படி – பொய் கணக்கு எழுதி தீராத கடனாக இருக்கும்படி
கணக்கெழுதியவர் – கணக்குகளை எழுதிய அவர்கள்
சாகும் வரையில் தலைச் சுமையாய் – நாம் இறக்கும் வரை அக்கடன் இருக்கும்படியாக பார்த்துக் கொண்டனர்
சற்றும் தயவுமில்லாமலே – சிறிதுகூட இரக்கமில்லாமல்
கூலி ஜனங்களை – கூலித் தொழிலாளிகளை
கப்பலிலே ஏற்றி – கப்பலில் ஏற்றினர்

**இலக்கணக்குறிப்பு :**

| | |
|---|---|
| 1. எழுதியவர் – வினையாலணையும் பெயர் | 3. பேரேடு – பண்புத்தொகை |
| 2. பற்றுவரவு – உம்மைத்தொகை | 4. எழுதி, ஏற்றி – வினையெச்சங்கள் |

**பகுபத உறுப்பிலக்கணம் :**

| எழுதி – எழுது + இ | ஏற்றி – எற்று + இ |
|---|---|
| எழுது – பகுதி | எழுது – பகுதி |
| இ – வினையெச்ச விகுதி | இ – வினையெச்ச விகுதி |

**புணர்ச்சி விதி :**

**குற்றியலுகரப்புணர்ச்சி**

1. **நூறாயிரம்** – நூறு + ஆயிரம்
**விதிகள்:** நூறு + ஆயிரம்
(i) '**உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்**' என்ற விதிப்படி **நூற் + ஆயிரம்** என்றானது.
(ii) '**உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து **நூறாயிரம்** என்றானது.

2. **கணக்கெழுதியவர்** – கணக்கு + எழுதியவர்
**விதிகள்:** கணக்கு + எழுதியவர்
(i) '**உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்**' என்ற விதிப்படி **கணக்க் + எழுதியவர்** என்றானது.
(ii) '**உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து **கணக்கெழுதியவர்** என்றானது.

**பண்புப்புணர்ச்சி**

1. **பேரேடு** – பெருமை + ஏடு
**விதிகள்:** பெருமை + ஏடு
(i) '**ஈறு போதல்**' என்ற விதிப்படி 'மை' விகுதி கெட்டு **பெரு + ஏடு** என்றானது.
(ii) '**ஆதிநீடல்**' விதிப்படி **பேரு + ஏடு** என்றானது.
(iii) '**முற்றும் அற்று ஒரோ வழி**' என்ற விதிப்படி வருமொழி முதலில் உயிர் வந்ததால் நிலைமொழி ஈற்றிலுள்ள உகரம் கெட்டு **பேர் + ஏடு** என்றானது.
(iv) '**உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து **பேரேடு** என்றானது.



orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

**மெய்யீற்றுப்புணர்ச்சி**

1. **தயவுமில்லாமலே** – தயவும் + இல்லாமலே
**விதி:** தயவும் + இல்லாமலே
'**உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து **தயவுமில்லாமலே** என்றானது.

**உடம்படுமெய் புணர்ச்சி**

1. **கப்பலிலேயேற்றி** – கப்பலிலே + ஏற்றி
**விதி:** கப்பலிலே + ஏற்றி
(i) '**ஏ முன் இவ்விருமையும்**' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றில் ஏகாரம் வந்ததால் இடையில் யகரம் தோன்றி **கப்பலிலே + ய் + ஏற்றி** என்றானது.
(ii) '**உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து **கப்பலிலேயேற்றி** என்றானது.

| பாடல் | பொருளுரை |
|---|---|
| 9. **அக்கரை தேசத்தின் லங்கைத் தீவுக்குள்ளே<br>அந்தமான் தீவு போன்ற இடத்தில் - மிகச்<br>சிக்கன மாகவே வெள்ளையர் தங்களின்<br>தேயிலைத் தோட்டத்திற் சேர்த்திடுவார்** | அந்நிய நாடான இலங்கைத் தீவு மற்றும் நம் நாடான அந்தமான் தீவு ஆகிய இடங்களில் ஆங்கிலேயர், தங்களின் தேயிலைத் தோட்டங்களில் அவர்களை மிகவும் குறைந்த கூலிக்கு வேலையில் சேர்த்தனர். |

**சொல்லும் பொருளும் :**

அக்கரை தேசத்தின் – அந்நிய நாடான
இலங்கைத் தீவுக்குள்ளே – இலங்கை தீவிலும்
அந்தமான் தீவு போன்ற இடத்தில் – நம் நாட்டின் அந்தமான் தீவிலும்
வெள்ளையர் – ஆங்கிலேயர்
தங்களின் தேயிலைத் தோட்டத்தில் – தங்களுக்குச் சொந்தமாக இருந்த தேயிலைத் தோட்டங்களில்
சிக்கனமாகவே – குறைந்த கூலிக்கு
சேர்த்திடுவர் – அவர்களைப் பணிக்கு அமர்த்தினர்

**இலக்கணக்குறிப்பு :** தேயிலைத் தோட்டம் – இரு பெயரொட்டுப் பண்புத்தொகை

**புணர்ச்சி விதி :**

**இயல்பீறு புணர்ச்சி**

**தேயிலைத் தோட்டம்** – தேயிலை + தோட்டம்
**விதி:** தேயிலை + தோட்டம்
'**இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்**' என்ற விதிப்படி **தேயிலை + த் + தோட்டம்** என்றாகி **தேயிலைத் தோட்டம்** என்று புணர்ந்தது.

| பாடல் | பொருளுரை |
|---|---|
| 10. **உண்ண வுணவுக்கு முள்ள செலவுக்கும்<br>ஒவ்வொரு நாளும் அரிதாகி - சிறு<br>மண்ணுளிப் பாம்பு போற் பெண்டு பிள்ளையுடன்<br>வாழ்ந்து வருவதைக் காணீரோ** | உணவுக்கும் பிற செலவுக்கும் அன்றாடம் பணம் கிடைப்பதே கடினமாக இருக்க மண்ணையே உண்டு வாழும் மண்ணுளிப் பாம்பு போல மனைவி, குழந்தைகளுடன் தேயிலைத் தோட்டத்திற்குள்ளேயே அவலநிலையில் வாழ்ந்து வருவதை அறிவீர்களோ! |

**சொல்லும் பொருளும் :**

உண்ண உணவுக்கும் – உண்பதற்கு உணவுக்காகவும்
உள்ள செலவுக்கும் – பிற தேவைகளுக்கான செலவுகளுக்கும்
ஒவ்வொரு நாளும் அரிதாகி – பணம் கிடைப்பதே கடினமாக ஒவ்வொரு நாளையும் துன்பத்தில் கடத்த வேண்டியுள்ளது.
சிறு மண்ணுளிப் பாம்பு போல – மண்ணையே உண்டு வாழும் மண்ணுளிப் பாம்பு போல
பெண்டு பிள்ளையுடன் – மனைவி மற்றும் குழந்தைகளுடன்
வாழ்ந்து வருவதை – தேயிலைத் தோட்டத்திற்குள்ளேயே அவல நிலையில் வாழ்ந்து வருவதை
காணீரோ – அறிவீர்களோ




orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

**இலக்கணக்குறிப்பு :**

1. மண்ணுளிப் பாம்பு – இரு பெயரொட்டுப் பண்புத்தொகை
2. வாழ்ந்து – வினையெச்சம்

**பகுபத உறுப்பிலக்கணம் :** **வாழ்ந்து – வாழ் + த்(ந்) + த் + உ**

வாழ் – பகுதி
த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

**புணர்ச்சி விதி :** **இயல்பீறு புணர்ச்சி**

**மண்ணுளிப்பாம்பு** – மண்ணுளி + பாம்பு

**விதி:** மண்ணுளி + பாம்பு

'**இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்**' என்ற விதிப்படி **மண்ணுளி + ப் + பாம்பு** என்றாகி **மண்ணுளிப் பாம்பு** என்று புணர்ந்தது.

| பாடல் | பொருளுரை |
|---|---|
| 11. **ஆதலாலே யினியிந்த சகோதர<br>அன்புள்ள சோதரி காளினிமேல் - இந்தப்<br>பூததயை யில்லாக் கங்காணிகள் செப்பும்<br>பொய்யுரை கண்டு மயங்காதீர்** | ஆகையால், அன்பான சகோதர, சகோதரிகளே! இனிமேல் இந்த இரக்கமில்லாத கங்காணிகள் கூறும் பொய்யான வார்த்தைகளை நம்பி மயங்கி விடாதீர்கள். |

**சொல்லும் பொருளும் :**

ஆதலாலே – ஆகையினால்
அன்புள்ள சகோதர சோதரிகாள் – அன்புள்ள சகோதர சகோதரிகளே
இனிமேல் பூததயை யில்லா – இனிமேல் இரக்கமில்லாத
இந்தக் கங்காணிகள் – இந்த முகவர்கள்
செப்பும் – கூறும்
பொய்யுரை – பொய்யான வார்த்தைகளை
கண்டு மயங்காதீர் – நம்பி மயங்கி விடாதீர்கள்

**இலக்கணக்குறிப்பு :**

| | |
|---|---|
| 1. கண்டு – வினையெச்சம் | 2. செப்பும் – 'செய்யும்' என்னும் வாய்பாட்டு பெயரெச்சம் |

**பகுபத உறுப்பிலக்கணம் :** **கண்டு – காண் (கண்) + ட் + உ**

காண் – பகுதி 'கண்' எனக் குறுகியது விகாரம்
ட் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

**புணர்ச்சி விதி :** **மெய்யீற்றுப் புணர்ச்சி**

**பொய்யுரை** – பொய் + உரை

**விதிகள்:** பொய் + உரை

(i) '**தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்**' என்ற விதிப்படி **பொய் + ய் + உரை** என்றானது.

(ii) '**உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து **பொய்யுரை** என்றானது.

| பாடல் | பொருளுரை |
|---|---|
| 12. **இப்படிச் சென்றந்தத் தேயிலைத் தோட்டத்தில்<br>இந்தியர் துன்பப்படுவதற்கு - மன<br>தொப்பிய கல்வியொழுக்கம் நாகரீகம்<br>ஒன்றேனு மில்லாக் குறையெனவே** | தேயிலைத் தோட்டத்திற்குச் சென்று இந்தியர்கள் படும் துயரங்களுக்குக் காரணம் மனதிற்கு இசைந்த கல்வி மற்றும் நாகரிகம் இவற்றில் ஒன்றுகூட இல்லாத குறையே ஆகும். |

**சொல்லும் பொருளும் :**

இப்படிச் சென்று அந்த தேயிலைத் தோட்டத்தில் – இப்படிச் அந்தத் தேயிலைத் தோட்டத்திற்குச் சென்று
இந்தியர் துன்பப்படுவதற்கு – இந்தியர் துயரமடைவதற்கு
மனதொப்பிய கல்வியொழுக்கம் நாகரீகம் – மனதிற்கு இசைந்த கல்வி, நாகரிகம்
ஒன்றேனுமில்லாக் குறையெனவே – இவற்றில் ஒன்று கூட இல்லாத குறைதான் காரணமாகும்,




orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

**இலக்கணக்குறிப்பு :**

| | | |
|---|---|---|
| 1. சென்று – வினையெச்சம் | 2. ஒப்பிய – பெயரெச்சம் | 3. ஒழுக்கம் – தொழிற்பெயர் |

**பகுபத உறுப்பிலக்கணம் :** **சென்று – செல் (ன்) + ற் + உ**

செல் – பகுதி 'ல்' 'ன்'ஆனது விகாரம்
ற் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

**புணர்ச்சி விதி :**

**குற்றியலுகரப்புணர்ச்சி**

1. **மனதொப்பிய** – மனது + ஒப்பிய
   **விதிகள்:** மனது + ஒப்பிய
   (i) '**உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்**' என்ற விதிப்படி **மனத் + ஒப்பிய** என்றானது.
   (ii) '**உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து **மனதொப்பிய** என்றானது.

**உடம்படுமெய் புணர்ச்சி**

1. **கல்வியொழுக்கம்** – கல்வி + ஒழுக்கம்
   **விதிகள்:** கல்வி + ஒழுக்கம்
   (i) '**இ ஈ ஐ வழி யவ்வும்**' என்ற விதிப்படி இடையில் யகரம் தோன்றி **கல்வி + ய் + ஒழுக்கம்** என்றானது.
   (ii) '**உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து **கல்வியொழுக்கம்** என்றானது.
2. **குறையெனவே** – குறை + எனவே
   **விதிகள்:** குறை + எனவே
   (i) '**இ ஈ ஐ வழி யவ்வும்**' என்ற விதிப்படி இடையில் யகரம் தோன்றி **குறை + ய் + எனவே** என்றானது.
   (ii) '**உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து **குறையெனவே** என்றானது.

**மெய்யீற்றுப் புணர்ச்சி**

1. **ஒன்றேனுமில்லா** – ஒன்றேனும் + இல்லா
   இது **மெய்யீற்றுப் புணர்ச்சி** ஆகும்.
   **விதி:** ஒன்றேனும் + இல்லா – '**உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து **ஒன்றேனுமில்லா** என்றானது.

| பாடல் | பொருளுரை |
|---|---|
| 13. **இன்றேனுங் கண்டுங்கள் பிள்ளைகளுக் கெல்லாம்<br>ஏற்றமுள்ள கல்வியைப் புகட்டி – நீங்கள்<br>ஒன்றுங் குறையில்லா ஒற்றுமையாகவே<br>ஊரிற் கட்டுப்பாடு செய்குவீரே.** | இனிமேலாவது அந்த துயரங்களின் கொடுமைகளை உணர்ந்து, உங்கள் பிள்ளைகள் அனைவருக்கும் உயர்வினைத்தரும் கல்விச் செல்வத்தை வழங்கி, ஒரு குறைவும் இல்லாத ஒற்றுமையான வாழ்க்கையை ஊரில் வாழ வகை செய்து கொள்ளுங்கள். |

**சொல்லும் பொருளும் :**

இன்றேனும் – இனிமேலாவது
கண்டு உங்கள் – உணர்ந்து உங்கள்
பிள்ளைகளுக்கு எல்லாம் – குழந்தைகள் அனைவருக்கும்
ஏற்றமுள்ள கல்வியைப் புகட்டி – உயர்வினைத் தரும் கல்வியை வழங்கி
ஒன்றும் குறையில்லா – ஒரு குறைவும் இல்லாத
ஒற்றுமையாகவே – ஒற்றுமையான வாழ்க்கையை
ஊரிற் கட்டுப்பாடு செய்குவீரே – ஊரில் வாழ வகை செய்து கொள்ளுங்கள்

**இலக்கணக்குறிப்பு :** புகட்டி – பெயரெச்சம்

**பகுபத உறுப்பிலக்கணம் :** **புகட்டி – புகட்டு + இ**

புகட்டு – பகுதி
இ – பெயரெச்ச விகுதி

ஆறுமை உடைய செயல்


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

**புணர்ச்சி விதி :**

**குற்றியலுகரப்புணர்ச்சி**

1. **கண்டுங்கள்** – கண்டு + உங்கள்

**விதிகள்:** கண்டு + உங்கள்

(i) '**உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்**' என்ற விதிப்படி **கண்ட் + உங்கள்** என்றானது.

(ii) '**உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து **கண்டுங்கள்** என்றானது.

2. **பிள்ளைகளுக்கெல்லாம்** – பிள்ளைகளுக்கு + எல்லாம்

**விதிகள்:** பிள்ளைகளுக்கு + எல்லாம்

(i) **உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்**' என்ற விதிப்படி **பிள்ளைகளுக்க் + எல்லாம்** என்றானது.

(ii) '**உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து **பிள்ளைகளுக்கெல்லாம்** என்றானது.

**உடம்படுமெய் புணர்ச்சி**

1. **குறையில்லா** – குறை + இல்லா

**விதிகள்:** குறை + இல்லா

(i) '**இ ஈ ஐ வழி யவ்வும்**' என்ற விதிப்படி இடையில் யகரம் தோன்றி **குறை + ய் + இல்லா** என்றானது.

(ii) '**உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து **குறையில்லா** என்றானது.

2. **ஏற்றமுள்ள** – ஏற்றம் + உள்ள

**விதி:** ஏற்றம் + உள்ள

'**உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து **ஏற்றமுள்ள** என்றானது.

## கற்பவை கற்றபின்

**உங்கள் பகுதியில் உள்ள வாய்மொழி இலக்கியங்களைத் தொகுத்து, சிறப்பு மலர் உருவாக்குக.**

| பாடல்கள் | |
|---|---|
| "மாசி மழை பெய்யாதோ<br>மலையின் வெள்ளம் சாயாதோ<br>ஏத்து மீன் ஏறாதோ<br>எங்க பஞ்சம் தீராதோ." | "ஆற்றுக்குள் போன வண்டி<br>சேற்றுக்குள்ளே நிற்கையிலே<br>கொண்டை போட்டுத் தள்ளுறாளே!<br>தள்ளுவதற்குக் கூடத் துணை<br>யாருமில்லை அந்தப் பக்கம்<br>கீச்கீச் சத்தம் கேட்கிறது.<br>சின்னப் பையன் வாரானோ?" |
| **விடுகதைகள்** | |
| பூ பூப்பது கண்ணுக்குத் தெரியும்,<br>காய் காப்பது கண்ணுக்குத் தெரியாது அது என்ன? – **வேர்க்கடலை** | நான்கு கால்கள் உள்ளவன்<br>இரண்டு கைகள் உள்ளவன்<br>உட்கார்ந்து கொண்டிருப்பான்<br>உட்கார இடம் கொடுப்பான் அவன் யார்?<br>– **நாற்காலி** |
| **பழமொழிகள்** | |
| 1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.<br>2. நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்கும் பாயும்.<br>3. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.<br>4. அவனன்றி ஓர் அணுவும் அசையாது.<br>5. தருமம் தலை காக்கும். | |

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. ‘தேயிலைத் தோட்டப் பாட்டு’ என்ற கவிதையை இயற்றியவர் ............... .
   அ) முகம்மது இராவுத்தர் ஆ) முகம்மது காசிம்
   இ) முகம்மது ரஹ்மான் ஈ) அப்துல் ரஹ்மான்
   **விடை: அ) முகம்மது இராவுத்தர்**

2. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள ‘தேயிலைத் தோட்டப் பாட்டு’ அமைந்துள்ள வகைப்பாடு ........
   அ) தாலாட்டுப் பாடல் ஆ) கும்மிப் பாடல்கள்
   இ) நையாண்டிப் பாடல்கள் ஈ) கதைப்பாடல்கள்
   **விடை: ஆ) கும்மிப் பாடல்கள்**

3. பஞ்சத்தினால் தமிழர்கள் ............... நூற்றாண்டில் புலம் பெயர்ந்தனர்.
   அ) 17 ஆம் ஆ) 18 ஆம் இ) 19 ஆம் ஈ) 20 ஆம்
   **விடை: இ) 19 ஆம்**

4. புலம் பெயர்ந்து சென்ற தமிழர்களின் நிலை குறித்து பாடியவர் ...............
   அ) பாரதியார் ஆ) நாமக்கல் கவிஞர்
   இ) பாரதி தாசன் ஈ) கவிமணி தேசிக விநாயகம்
   **விடை: அ) பாரதியார்**

5. ‘சீரும் சிறப்பும்’ இலக்கணக்குறிப்பு தருக.
   அ) உம்மைத் தொகை ஆ) எண்ணும்மை
   இ) உவமைத் தொடர் ஈ) உரிச்சொற்றொடர்
   **விடை: ஆ) எண்ணும்மை**

6. பேரேடு இலக்கணக்குறிப்பு தருக.
   அ) பண்புத் தொகை ஆ) வினைத்தொகை
   இ) உம்மைத்தொகை ஈ) உருவகம்
   **விடை: அ) பண்புத்தொகை**

7. ‘கங்காணிகள்’ என்பவர் ............... .
   அ) ஆங்கிலேயர் ஆ) கடன் வசூலிப்போர்
   இ) முகவர்கள் ஈ) தேயிலைத் தோட்ட முதலாளிகள்
   **விடை: இ) முகவர்கள்**

8. தேயிலைத் தோட்டத்தில் இந்தியர்கள் துன்பப்பட்டதற்குக் காரணமாக ஆசிரியர் கூறுவது ......
   அ) செல்வ வளம் இல்லாமை ஆ) கல்வியறிவு இல்லாமை
   இ) சிந்தனைத்திறன் இல்லாமை ஈ) தொழில்வளம் இல்லாமை
   **விடை: ஆ) கல்வியறிவு இல்லாமை**

9. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் துன்பமான வாழ்வுக்கு ஆசிரியர் கூறியுள்ள உவமை யாது?
   அ) வலையில் சிக்கிய மான் ஆ) கூண்டில் அடைப்பட்ட பறவை
   இ) மண்ணுளிப் பாம்பு ஈ) மண்புழு
   **விடை: இ) மண்ணுளிப் பாம்பு**

10. ‘பொய்யுரை’ புணர்ச்சி விதி கூறுக.
   அ) ‘உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்’
   ஆ) ‘இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்’
   இ) ‘தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்’
   ஈ) ‘இ ஈ ஐ வழி யவ்வும்’
   **விடை: இ) ‘தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்’**

**குறுவினா**

1. **ஆங்கிலேயரின் குடியேற்ற நாடுகளில் தமிழர்கள் ஏன் புலம்பெயர்ந்தனர்?**
   19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பஞ்சத்தினாலும், வெள்ளையர் வஞ்சத்தினாலும் ஆங்கிலேயரின் குடியேற்ற நாடுகளில் தமிழர்கள் கரும்புத் தோட்டத் தொழிலாளர்களாகவும், தேயிலைத் தோட்டக் கூலிகளாகவும் புலம்பெயர்ந்தனர்.

2. **இந்திய நாட்டின் கைத்தொழில்களை நசுக்கி நம்மை அற்ப பிராணிகளாய் செய்தவர்கள் யாவர்?**
   நம் இந்திய தேசத்தில் நம்மிடையே குடி புகுந்து, நமக்கு வருமானத்தை ஈட்டி தந்த கைத்தொழில்கள் அனைத்தையும் சமயம் பார்த்து நசுக்கி, நம்மை அற்ப பிராணிகளாய் செய்தவர்கள் ஆங்கிலேயர் ஆவர்.

**3. 19 மற்றும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதிகளில் வெளிவந்த பாடல்கள், கதைப்பாடல்கள், கும்மிப்பாடல்கள் எவ்வாறெல்லாம் அழைக்கப்பட்டன?**

வெகுசன இலக்கியம், முச்சந்தி இலக்கியம், குஜிலி நூல்கள், காலணா அரையணா பாட்டுப் புத்தகங்கள், பெரிய எழுத்துப் புத்தகங்கள், தெருப்பாடல்கள் என்று பலவாறாக அழைக்கப்பட்டன.

**4. நம் இந்திய நாடு எவ்வாறு இருந்ததாக தேயிலைத் தோட்டப் பாடலின் ஆசிரியர் கூறியுள்ளார்?**

பண்பாட்டிலும் ஆட்சித் திறத்திலும் நாட்டிலுள்ள மக்கள் போற்றும் படி, மணிமகுடம் போல் சிறந்து விளங்கும் செல்வச் செழிப்புடன் நம் இந்திய நாடு இருந்ததாக ஆசிரியர் கூறியுள்ளார்.

**5. இந்திய நாட்டில் சீரும் சிறப்பும் எதனால் அழிந்தது?**

இந்திய நாட்டின் சீரும் சிறப்பும் அந்நிய தேசத்தவர், நம் நாட்டில் குடிபுகுந்ததால் அழிந்தது.

**6. இந்தியர்களைத் தோட்டத் தொழிலாளர்களாக ஆங்கிலேயர் எங்கு அனுப்பி வைத்தனர்?**

இந்தியர்களைத் தோட்டத் தொழிலாளர்களாக ஆங்கிலேயர் இலங்கைத் தீவிற்கும் அந்தமான் தீவிற்கும் ஆங்கிலேயர் அனுப்பி வைத்தனர்.

**7. தேயிலைத் தோட்டத்தில் தொழிலாளர்கள் எவ்வாறு வாழ்ந்து வந்தனர்?**

உணவுக்கும் பிற செலவுக்கும் ஒவ்வொரு நாளும் கடினமான துன்பத்தை அடைந்து மண்ணுளிப் பாம்பு போல வாழ்ந்து வந்தனர்.

## சிறுவினா

**1. தேயிலை தோட்டப் பாட்டு -நூற்குறிப்பு வரைக.**

(i) நம் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள கும்மிப் பாடல்கள் "பாரத மக்களின் பரிதாபச் சிந்து" என்ற 'தேயிலைத் தோட்டப் பாட்டு' என்னும் நூலில் இருந்து எடுத்தாளப்பட்டவை.

(ii) 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை பல்வேறு பொருள்கள் பற்றிய இவ்வெளிப்பாடுகள் மெல்லிய தாளில், பெரிய எழுத்தில், மலிவான அச்சில் சிறுசிறு நூல்களாக வெளியிடப்பட்டன.

(iii) வெகுசன இலக்கியம், முச்சந்தி இலக்கியம், குஜிலி நூல்கள், காலணா அரையணா பாட்டுப் புத்தகங்கள், பெரிய எழுத்துப் புத்தகங்கள், தெருப்பாடல்கள் என்று இந்நூல்கள் அழைக்கப்பட்டன.

**2. ஆங்கிலேயர் நம்நாட்டு மக்களை எவ்வாறு நடத்தினர்?**

(i) நமக்கு வருமானம் கொடுத்து, நம்மைக் காப்பாற்றி வந்த கைத்தொழில்கள் அனைத்தையும் அழித்து விட்டனர்.

(ii) நம்மை விலங்கினும் கீழாக நடத்தினர்.

(iii) பிறந்து வளர்ந்த இடத்தில் பெருமையுடன் வேலை செய்து வாழ்ந்து வந்த நம் மக்களை பேயையும் நாயையும் விட கீழ்நிலையில் நடத்தினர்.

(iv) தேயிலைத் தோட்டத்தின் கூலிகளாக இலங்கைக்கும் அந்தமானுக்கும் அனுப்பி துன்பப்படுத்தினர்.

**3. ஆங்கிலேயர் காலத்தில் வாழ்ந்த இந்திய மக்களுக்கு கவிஞர் முகம்மது இராவுத்தர் கூறிய அறிவுரைகள் யாவை?**

(i) இரக்கமில்லாத கங்காணிகள் கூறும் பொய்யுரைகளைக் கண்டு மயங்க வேண்டாம்.

(ii) தேயிலைத் தோட்டத்தில் இந்தியர்கள் கூலிகளாகத் துன்பப்படுவதற்குக் காரணம் கல்வியறிவு இல்லாமையே ஆகும். எனவே தங்கள் குழந்தைகளுக்கு உயர்வைத் தரும் கல்வியை வழங்க வேண்டும்.

(iii) ஒரு குறையும் இல்லாமல் கட்டுப்பாட்டுடனும் ஒற்றுமையாகவும் வாழ வேண்டும்.

**4. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆங்கிலேயர்கள் செய்த வஞ்சகச் செயல்கள் யாவை?**

(i) தொழிலாளர்கள் வாங்கிய சிறிய தொகையை, பெருந்தொகையாக பொய்க் கணக்கு எழுதினர்.

(ii) அந்தக் கடனிலிருந்து சாகும் வரை மீண்டு வர முடியாதபடி வட்டித் தொகையை ஏற்றிக் கொண்டே சென்றனர்.

(iii) மிகக்குறைந்த ஊதியத்தில் அதிக வேலை வாங்கினர்.

☆ ☆ ☆




orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

# மொழித்திறன் பயிற்சிகள்

## கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக

1. **மரங்கள் அடர்ந்த காட்டில் ஒருவள் மட்டும் சென்று கொண்டிருந்தாள்.**
மரங்கள் அடர்ந்த காட்டில் ஒருத்தி மட்டும் சென்று கொண்டிருந்தாள்.

2. **முகிலனுக்குக் கோர்வையாகப் பேசத் தெரியவில்லை.**
முகிலனுக்குக் கோவையாகப் பேசத் தெரியவில்லை.

3. **சித்த மருத்துவர், நோயாளியிடம் பாவக்காயைச் சாப்பிடவேண்டாம் என்று கூறினார்.**
சித்த மருத்துவர், நோயாளியிடம் பாகற்காயைச் சாப்பிடவேண்டாம் என்று கூறினார்.

4. **வாரத்திற்கு ஒருமுறை எண்ணை தேய்த்துக் குளிப்பது மிகவும் சிறந்தது.**
வாரத்திற்கு ஒருமுறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பது மிகவும் சிறந்தது.

5. **திருவிழாவில் காணாமல் போன குழந்தை எங்கே செல்வதென்று தெரியாமல் முழித்தது.**
திருவிழாவில் காணாமல் போன குழந்தை எங்கே செல்வதென்று தெரியாமல் விழித்தது.

6. **ஆத்தங்கரையோரத்தில் இருந்த பனை மரங்களில் ஏறி பனைஇலைகளை வெட்டினான் விவசாயி.**
ஆற்றங்கரையோரத்தில் இருந்த பனை மரங்களில் ஏறி பனைஓலைகளை வெட்டினான் விவசாயி.

7. **மொட்டைமாடிக்குச் சித்ரா வத்தல் எடுக்கச் சென்றாள்.**
மொட்டைமாடிக்குச் சித்ரா வற்றல் எடுக்கச் சென்றாள்.

8. **தாத்தா மாத்திரைகளை ஒவ்வொன்றாக எடுத்து முழுங்கினார்.**
தாத்தா மாத்திரைகளை ஒவ்வொன்றாக எடுத்து விழுங்கினார்.

9. **அப்பா அரைகிலோ அவரக்காயும் ஒரு டசன் வாலைப்பழமும் வாங்கி வந்தார்.**
அப்பா அரைகிலோ அவரைக்காய் ஒரு டசன் வாழைப்பழமும் வாங்கி வந்தார்.

10. **பாட்டி தன் பேத்தியிடம் சீயக்காய் தேய்த்துக் குளிக்கச் சொன்னார்.**
பாட்டி தன் பெயர்த்தியிடம் சிகைக்காய் தேய்த்துக் குளிக்கச் சொன்னார்.

11. **தற்காலத்தில் ஆம்பிள, பொம்பளை என்ற வேறுபாடின்றி அனைவரும் சமமாகக் கருதப்படுகிறார்கள்.**
தற்காலத்தில் ஆண்பிள்ளை, பெண்பிள்ளை என்ற வேறுபாடின்றி அனைவரும் சமமாகக் கருதப்படுகிறார்கள்.

12. **கிராமத்தில் உள்ள நஞ்சை, புஞ்சை எல்லாம் தண்ணீ இல்லாமல் வறண்டு விட்டன.**
கிராமத்தில் உள்ள நன்செய், புன்செய் எல்லாம் தண்ணீர் இல்லாமல் வறண்டு விட்டன.

13. **மக்கள் நாகரீக மோகத்தில் சிக்கித் தவிக்கின்றனர்.**
மக்கள் நாகரிக மோகத்தில் சிக்கித் தவிக்கின்றனர்.

14. **காலையில் பணிக்குச் சென்றவன் செவத்தில் அடித்த பந்து போல உடனே வீட்டிற்கு வந்துவிட்டான்.**
காலையில் பணிக்குச் சென்றவன் சுவரில் அடித்த பந்து போல உடனே வீட்டிற்கு வந்துவிட்டான்.

15. **இயற்கை சீரழிவின் போது பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாத்த பலரும் முன்வந்தனர்.**
இயற்கை சீரழிவின் போது பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்ற பலரும் முன்வந்தனர்.





orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

## வல்லின மெய்களை இட்டு எழுதுக

### வல்லின மெய்களை (க், ச், த், ப்) இட்டு எழுதுக :

1. **அழகியலை உருவாக்குவதற்கு தளம் அமைத்து தருகின்ற தொல்காப்பியம், இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேர பேசுகின்ற இலக்கணம் ஆகும்.**
அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருகின்ற தொல்காப்பியம், இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கணம் ஆகும்.

2. **தமிழை தமில் என்று ஒலிப்பதைவிட கொடிய செயல் வேறு எதுவும் இருக்க முடியாது.**
தமிழைத் தமில் என்று ஒலிப்பதைவிடக் கொடிய செயல் வேறு எதுவும் இருக்க முடியாது.

3. **சின்னசின்ன மழைதுளிகள் மனித வாழ்வின் பேரின்பம்.**
சின்னச்சின்ன மழைத்துளிகள் மனித வாழ்வின் பேரின்பம்.

4. **நிலத்தடி நீர்மட்டத்தை தக்கவைத்து கொள்வதில் மணலின் பங்கு இன்றியமையாதது.**
நிலத்தடி நீர்மட்டத்தைத் தக்கவைத்துக் கொள்வதில் மணலின் பங்கு இன்றியமையாதது.

5. **தாய்வழி சொத்துகள் பெண்டிருக்கே போய் சேர்ந்தன என்பதை மருததிணைப் பாடல் கூறுகிறது.**
தாய்வழிச் சொத்துகள் பெண்டிருக்கே போய்ச் சேர்ந்தன என்பதை மருதத்திணைப் பாடல் கூறுகிறது.

6. **பள்ளிக்கூட பிள்ளைகள் தமக்கு தெரிந்த பாடங்களை அடிக்கடி சிந்தித்து வருவார்கள்.**
பள்ளிக்கூடப் பிள்ளைகள் தமக்குத் தெரிந்த பாடங்களை அடிக்கடி சிந்தித்து வருவார்கள்.

7. **சாலை விதிகளை பின்பற்றி பயணங்களை மேற்கொள்ளும்பொழுது விபத்தில்லாத நாடு உருவாகும்.**
சாலை விதிகளைப் பின்பற்றிப் பயணங்களை மேற்கொள்ளும்பொழுது விபத்தில்லாத நாடு உருவாகும்.

8. **ஒருவரின் தோற்றத்தை கண்டு இகழ கூடாது.**
ஒருவரின் தோற்றத்தைக் கண்டு இகழக் கூடாது.

9. **வாளைப்போல் வெளிப்படையாக துன்பம் செய்யும் பகைவருக்கு அஞ்ச வேண்டியதில்லை.**
வாளைபோல் வெளிப்படையாகத் துன்பம் செய்யும் பகைவருக்கு அஞ்ச வேண்டியதில்லை.

10. **ஐராவதம் மகாதேவன் கையில் வைத்திருந்த நோட்டு புத்தகத்தை பிரித்து, கல்வெட்டை எழுத்து கூட்டி வாசித்து அதனைப் படியெடுத்தார்.**
ஐராவதம் மகாதேவன் கையில் வைத்திருந்த நோட்டுப் புத்தகத்தைப் பிரித்து, கல்வெட்டை எழுத்துக் கூட்டி வாசித்து அதனைப் படியெடுத்தார்.

11. **முல்லை கொடியொன்று பற்றிப்பட தான் ஏறிவந்த பெரிய தேரினை ஈந்தவன் பாரி.**
முல்லைக் கொடியொன்று பற்றிப்படரத் தான் ஏறிவந்த பெரிய தேரினை ஈந்தவன் பாரி.

12. **பிற சமய இலக்கியங்களை போலவே கிறித்துவ சமய இலக்கியங்களும் தமிழ் இலக்கிய வளமைக்கு பெரும் பங்களிப்பை செய்துள்ளன.**
பிற சமய இலக்கியங்களைப் போலவே கிறித்துவ சமய இலக்கியங்களும் தமிழ் இலக்கிய வளமைக்குப் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளன.

13. **சிவாஜி கணேசன் தமிழக மக்களை சிலிர்த்தெழ செய்த உலக பிரசித்தி பெற்ற வசனத்தை ஏற்ற இறக்கத்துடன் சொன்னார்.**
சிவாஜி கணேசன் தமிழக மக்களைச் சிலிர்த்தெழச் செய்த உலகப் பிரசித்தி பெற்ற வசனத்தை ஏற்ற இறக்கத்துடன் சொன்னார்.

14. **கவிஞர் நகுலன் அண்ணாமலை பல்கலை கழகத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் முதுகலைபட்டம் பெற்றவர்.**
கவிஞர் நகுலன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் முதுகலைப்பட்டம் பெற்றவர்.

15. **பேருந்தினுள் பயணிகள் பலவாறாக பேசி கொண்டிருந்தனர்.**
பேருந்தினுள் பயணிகள் பலவாறாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

மொழித்திறன் பயிற்சிகள்


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

## வல்லின மெய்களை நீக்கி எழுதுக

### வல்லின மெய்களை (க், ச், த், ப்) நீக்கி எழுதுக :

1. **சங்க இலக்கியம் அகத்திணைச் சார்ந்தச் செய்திகளையும் புறத்திணைச் சார்ந்தச் செய்திகளையும் பாடற்பொருள்களாக வடிவமைத்துள்ளது.**
சங்க இலக்கியம் அகத்திணை சார்ந்த செய்திகளையும் புறத்திணை சார்ந்த செய்திகளையும் பாடற்பொருள்களாக வடிவமைத்துள்ளது.

2. **சொல்லில்தான் உணர்வும் பொருளும் பொதிந்துக் கிடக்கின்றன; கலையும் பண்பாடும் வரலாறும் அரசியலும் பொதிந்துக் கிடக்கின்றன.**
சொல்லில்தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன; கலையும் பண்பாடும் வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன.

3. **நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்றுத் தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.**
நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.

4. **மனிதக் குலத்தில் ஆதியில் தோன்றி வளர்ந்தத் தாய்வழி முறையானதுத் தமிழர்களிடம் இருந்ததைச் சங்க இலக்கியங்களின் வழி அறியலாம்.**
மனிதக் குலத்தில் ஆதியில் தோன்றி வளர்ந்த தாய்வழி முறையானது தமிழர்களிடம் இருந்ததைச் சங்க இலக்கியங்களின் வழி அறியலாம்.

5. **பாலர்களுக்குரியப் பள்ளிக்கூடங்கள் முதல் பழுத்தக் கிழவர்கள் இருந்துக் கற்கும் பள்ளிக்கூடங்கள் வரையிற்ப் பலப் பாடசாலைகள் தமிழ்நாட்டில் இருந்து வந்தன.**
பாலர்களுக்குரிய பள்ளிக்கூடங்கள் முதல் பழுத்த கிழவர்கள் இருந்து கற்கும் பள்ளிக்கூடங்கள் வரையிற் பல பாடசாலைகள் தமிழ்நாட்டில் இருந்து வந்தன.

6. **இருட்டிவிட்டதால் மற்றக் கல்வெட்டுகளை இன்னொரு முறைப் பார்த்துக் கொள்ளலாம் என்று இறங்கிவிட்டனர் கல்வெட்டாய்வாளர்கள்.**
இருட்டிவிட்டதால் மற்ற கல்வெட்டுகளை இன்னொரு முறை பார்த்துக் கொள்ளலாம் என்று இறங்கிவிட்டனர் கல்வெட்டாய்வாளர்கள்.

7. **காலங்காலமாக மனித மனங்களிடையே உறைந்து கிடக்கும் தொல்க்கதைகள் பல வடிவங்களில் வெளிப்படுகின்றன.**
காலங்காலமாக மனித மனங்களிடையே உறைந்து கிடக்கும் தொல்கதைகள் பல வடிவங்களில் வெளிப்படுகின்றன.

8. **தமிழில், கண்ணகிக் கதைத் தொன்மை நோக்கிய வளர்ச்சியைப் பெற்றுள்ளது.**
தமிழில், கண்ணகி கதை தொன்மை நோக்கிய வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

9. **மயிலை சீனி. வேங்கடசாமி ஆசிரியர்ப் பயிற்சிப் பெற்றுத் தொடக்கப்பள்ளியில் 25 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்.**
மயிலை சீனி. வேங்கடசாமி ஆசிரியர் பயிற்சி பெற்றுத் தொடக்கப்பள்ளியில் 25 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்.

10. **பருவம்ப் பொய்க்காமல் மழைப் பெய்யும் வளமலையில் வாழும் மயிலுக்குப் பேகன் தன் ஆடையை ஈந்தான்.**
பருவம் பொய்க்காமல் மழை பெய்யும் வளமலையில் வாழும் மயிலுக்குப் பேகன் தன் ஆடையை ஈந்தான்.

11. **சங்கக் காலத்துக்குப் பிற்பட்டக் காலத்தில் தமிழகத்தைக் களப்பிரர்கள் என்ற மன்னர்கள் ஆட்சிப் புரிந்தனர்.**
சங்கக் காலத்துக்கு பிற்பட்ட காலத்தில் தமிழகத்தைக் களப்பிரர்கள் என்ற மன்னர்கள் ஆட்சி புரிந்தனர்.

12. **பட்டினப்பாலையில் குதிரைகள் இறக்குமதிச் செய்யப்பட்டதுப் பற்றியக் குறிப்பு உள்ளது.**
பட்டினப்பாலையில் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டது பற்றிய குறிப்பு உள்ளது.

13. **இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பேப் பன்னாட்டு வணிகம் நிகழும் இடமாகத் தமிழகம்த் திகழ்ந்தது.**
இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பன்னாட்டு வணிகம் நிகழும் இடமாகத் தமிழகம் திகழ்ந்தது.

14. **உள்ளேப் போகலாம் என்று அப்பா சொன்னதும் மகன் பின்த் தொடர்ந்தான்.**
உள்ளே போகலாம் என்று அப்பா சொன்னதும் மகன் பின் தொடர்ந்தான்.




orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

## பழமொழி – மொழிபெயர்ப்பு

1. As rare hen's teeth
அத்தி பூத்தாற் போல
2. A guilty conscience needs to accuser.
குற்றமுள்ள நெஞ்சம் குறுகுறுக்கும்.
3. A hasty man never wants to woe.
ஆத்திரகாரனுக்கு புத்தி மட்டு.
4. A man of courage never wants weapons.
வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
5. An artist lives every where.
கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு.
6. A young calf knows not fear.
இளங்கன்று பயமறியாது.
7. As is the king, So are his subject.
மன்னன் எவ்வழி, மக்கள் அவ்வழி
8. As they sow, so let them reap.
வினை விதைத்தவன் வினை அறுப்பான்.
9. A little learning is a dangerous thing.
குறைந்த அறிவு ஆபத்தை உண்டாக்கும்.
10. All his geese are swans
காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு
11. Be just before you are generous.
ஆற்றில் போட்டாலும் அளந்து போடு
12. Bend the twig, Bent the tree.
ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?
13. Constant dripping wears away the stone.
எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
14. Child is the father of the man.
விளையும் பயிர் முளையிலேயே தெரியும்.
15. Custom in infancy becomes nature in old age.
தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

## மொழியாக்கம்

1. Congratulation on your success in the examination
நீ தேர்வில் வெற்றி பெற்றமைக்கு எனது பாராட்டுக்கள்.
2. But for your timely help I would not have succeeded.
சரியான நேரத்தில் உன்னுடைய உதவியின்றி என்னால் வெற்றி பெற்றிருக்க முடியாது.

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

12ஆம் வகுப்பு

# அரசு துணைத்தேர்வு - ஆகஸ்ட்-2021

## பகுதி I - பொதுத் தமிழ்

## Language - Part - I - Tamil

(வினாத்தாள் விடைகளுடன்)

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** [14 × 1 = 14]

1. **கருத்து 1:** இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.
   **கருத்து 2:** தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.
   அ) கருத்து 1 மற்றும் 2 சரி
   ஆ) கருத்து 1 மட்டும் சரி
   இ) கருத்து 1 மற்றும் 2 தவறு
   ஈ) கருத்து 2 மட்டும் சரி
2. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது:
   அ) மழைத்துளிகள் ஆ) சூரிய ஒளிக்கதிர்
   இ) நீர்நிலைகள் ஈ) மழை மேகங்கள்
3. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது:
   அ) அவமானம் ஆ) வஞ்சனை
   இ) வக்கிரம்
   ஈ) இவை அனைத்தும்
4. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை .......... .
   அ) மன்றங்களும் அவைகளும்
   ஆ) திருமணமும் குடும்பமும்
   இ) நிதியமும் சுங்கமும்
   ஈ) அறவோர், துறவோர்
5. ‘பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்’ - விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்:
   அ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர்
   ஆ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர்
   இ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்
   ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்
6. ‘குழிமாற்று’ எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
   அ) கணிதம் ஆ) இலக்கியம்
   இ) வேளாண்மை ஈ) புவியியல்
7. பொருத்துக.
   (1) மாச்சீர் - (i) கருவிளம், கூவிளம்
   (2) காய்ச்சீர் - (ii) நாள், மலர்
   (3) விளச்சீர் - (iii) தேமாங்காய், புளிமாங்காய்
   (4) ஓரசைச்சீர் - (iv) தேமா, புளிமா
   அ) (1)-(ii), (2)-(iii), (3)-(i), (4)-(iv)
   ஆ) (1)-(i), (2)-(ii), (3)-(iv), (4)-(iii)
   இ) (1)-(iii), (2)-(iv), (3)-(ii), (4)-(i)
   ஈ) (1)-(iv), (2)-(iii), (3)-(i), (4)-(ii)
8. தமிழில் திணைப்பாகுபாடு .......... அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
   அ) தொடர்க்குறிப்பு ஆ) பொருட்குறிப்பு
   இ) எழுத்துக்குறிப்பு ஈ) சொற்குறிப்பு
9. ஆராய்ந்து சொல்கிறவர்:
   அ) தூதுவர் ஆ) அரசர்
   இ) உறவினர்
   ஈ) சொல்லியபடி செய்பவர்
10. ‘வெங்கதிர்’ - இலக்கணக் குறிப்புத் தருக.
    அ) பெயரெச்சம் ஆ) தொழிற்பெயர்
    இ) உரிச்சொல் ஈ) பண்புத் தொகை
11. ‘உரிமைத்தாகம்’ எனும் சிறுகதையின் ஆசிரியர்:
    அ) பூமணி ஆ) உத்தமசோழன்
    இ) சாந்தாதத்
    ஈ) தோப்பில் முகமது மீரான்
12. முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ் மாதம் கண்டறிக.
    அ) குழியாடி ஆ) அரசாணி
    இ) கோதை ஈ) கடையாணி
13. இரட்சணிய யாத்திரிகம் என்ற நூலின் ஆசிரியர் யார்?
    அ) பாரதியார்
    ஆ) எச்.ஏ.கிருட்டிணனார்
    இ) நத்தத்தனார் ஈ) பெருந்தேவனார்
14. தலைக்கோல் - புணர்ச்சி விதியை தேர்ந்தெடுக்க.
    அ) இஈஐ வழி யவ்வும்.
    ஆ) இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.
    இ) உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்.
    ஈ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

### பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

#### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** [3 × 2 = 6]

15. "நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது" - விளக்கம் தருக.
16. ‘தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள் வளர் தலமோங்கு கந்தவேளே’ - தொடருக்குப் பதவுரை எழுதுக.
17. நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?
18. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

www.kalvinesan.com https://t.me/kalvinesan
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** [2 × 2 = 4]

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

20. சங்க காலத்தில் தாய்வழிச் சமூகமுறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?

21. அக்காலத்துக் கல்வி முறை மனனப்பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** [7 × 2 = 14]

22. பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க.
விலை, விளை

23. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக்குக.
(ஐ, ஆல், கு, இன், அது, கண்)
அ) மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்.
ஆ) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.

24. கீழ்காண் சொற்றொடரில் பிழை நீக்கி எழுதுக.
அ) பறவைகள் நெல்மணிகளை வேகமாக் கொத்தித் தின்றது.
ஆ) அவன் வெண்மதியிடம் பேசினாய்.

25. சொற்களை ஏற்ற இடத்தில் நிரப்புக.
வேற்றுயிரால் .......... விளையா திருப்பதற்(கு)
ஏற்ற வண்ணம் ........... இயற்றாமல் - ஆற்றலுறும்
.......... இனம் வருந்தப் பேரிடர் செய் கின்றாயே
நண்பா! .......... நவில்?
(பெண்பால், சரியோ, காவல், தொல்லை)

26. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
அ) இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்.
ஆ) ஐப்பசி அடைமழையில் ஊருனி நிறைந்தது.

27. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
அ) பலகை ஆ) தலைமை

28. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) அறுத்து ஆ) களைந்து

29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) செம்பரிதி ஆ) ஏழையென

30. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

**பகுதி - III**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** [2 × 4 = 8]

31. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

32. மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள் நெறி நின்று விளக்குக.

33. 'ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும்' - இடம்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

34. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** [2 × 4 = 8]

35. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

36. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

37. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் விளக்கம் தருக.

38. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** [3 × 4 = 12]

39. நிரல்நிறை அணி (அல்லது) சொற்பொருள் பின்வரும் நிலையணியைச் சான்றுடன் விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக.
(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

வெட்டி யடிக்குது மின்னல் - கடல்
  வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
  கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
  தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
  எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!

- பாரதியார்

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
அ) திணை விதைத்தவன் தினை அறுப்பான்
(அல்லது)
ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

42. பாடாண்திணையைச் சான்றுடன் விளக்குக.

43. கீழ்க்காணும் பத்தியைச் சான்றுடன் விளக்குக.

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின்முதல் வேட்கை தன் குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழிவளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும்.

வினாக்கள்:
(1) குழந்தையின் மனவளர்ச்சி எதனுடன் தொடர்புடையது?
(2) மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் .......... ஆகும்.
(3) தாயின் முதல் வேட்கையாக இருப்பது என்ன?
(4) மொழி எவ்வாறு வளர்ச்சி பெறும்?

**பகுதி - IV**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** [3 × 6 = 18]

44. அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.
(அல்லது)
ஆ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழிநின்று நிறுவுக.

45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

www.kalvinesan.com https://t.me/kalvinesan

SURA'S

12TH STD SCHOOL GUIDES

2022-23 EDITION




Call @
9600175757
8124301000
orders@surabooks.com

Buy Online @
surabooks.com

Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com